பக்கங்கள்: 16 விலை:20 ரூபா

**இது ரகசியம் அல்ல!**

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராக அவரின் அமைச்சராக இருந்த டெனிஸ்வரன் தொடுத்த வழக்குகள் இந்த மாகாணசபையின் ஆட்சிக்காலம் காலவதியானபின்னரும் கூடத்தொடரும் என்பதுபோலவே தோன்றுகின்றது. பக்கம் 03 >>>


# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | புரட்டாதி 03 | புதன்கிழமை 19.09.2018 | கதிர் 318


# படையினர் புலிகள் இரு தரப்புகளுக்குமே மன்னிப்பும் விடுவிப்பும்!

## போர்க் குற்றங்களில் இருந்து மீள்வதற்கு கொழும்பு வகுக்கும் வியூகம் இதுதான்

கொழும்பு, செப்ரெம்பர் 19

ஒரு தசாப்த காலத்துக்கு முன்னர் முடிவுற்ற யுத்தத்தின்போது அரசுப் படைகள் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்புகளினாலும் இழைக்கப்பட்டவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் யுத்தக் குற்றங்கள் அனைத்தையும் ஒரேயடியாக மறந்து, பொது மன்னிப்பளித்து, இரு தரப்புக்களையுமே முழுமையாக விடுவிப் பதன் மூலம் நாட்டில் புதிய கண்ணோட்டத்தில் நல்லிணக்கத்தையும், இன ஒற்றுமையையும் கட்டிக் காப்போம்.

- இவ்வாறு பகிரங்க அழைப்பு ஒன்றை விடுவிப்பதன் மூலம் சர்வதேச யுத்த குற்ற விசாரணைகளில் இருந்து அரச படையினரை முழுமையாக விடுவிக்கும் முயற்சியில் இலங்கை அரசுத் தரப்பு முனைப்புடன் ஈடுபட்டிருப்பதாக அறியவருகின்றது. பக்கம் 13 >>>

## உண்மைகளைக் கண்டறியாமல் படைகளுக்குப் பொதுமன்னிப்பா?

### ஏற்க முடியாது எனச் சீறுகின்றது தமிழ்க் கூட்டமைப்பு

கொழும்பு, செப். 19

யுத்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் போன்றவை தொடர்பில் நீதிமுறையான விசாரணைகள் நடைபெற்று முதலில் உண்மைகள் கண்டறியப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டும். யார், யார், எத்தகைய குற்றங்களை பக்கம் 13 >>>

## வடக்கு - கிழக்குக் கல்வி விருத்திக்கு உதவி புரியவேண்டும் தமிழக அரசு

### யாழ். வந்த செங்கோட்டையனிடம் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செப். 19

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்கள் இந்தியாவிலுள்ள பல்கலைக் கழகங்கள் போன்று பக்கம் 14 >>>

## யாழ். நூலகத்துக்கு 50,000 நூல்கள் தமிழக அரசு நேற்று வழங்கியது



யாழ்ப்பாணம், செப். 19

யாழ். நூலகத்துக்கு 50 ஆயிரம் புத்தகங்களை தமிழ்நாடு அரசு வழங்கியது. பக்கம் 13 >>>

## வடக்கு, கிழக்கு, மலையகத்துக்கு இந்திய அரசின் உதவி தொடரும்

### தமிழகக் கல்வி அமைச்சர் யாழில் உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செப். 19



வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களுக்கு இந்திய அரசு தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் என்று தமிழகக் கல்வி அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.

இரு நாட்டுப் பிரதமர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெறும் இந்த உதவித் திட்டங்களுக்கு தமிழக அரசு உறுதுணையாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

தமிழக அரசினால் யாழ். பொது நூலகத்துக்கு பக்கம் 14 >>>

## மைத்திரிபால கொலைச் சதி; சுயாதீன விசாரணை ஆரம்பம்

### சபையில் பிரதமர் அறிவிப்பு

கொழும்பு, செப். 19

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொலை செய்வதற்கு சூழ்ச்சித் திட்டம் வகுக்கப்பட்டது என அம்பலமாகியுள்ள தகவல் தொடர்பில் பக்கம் 14 >>>

## தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டம் தொடர்கிறது!

கொழும்பு, செப். 19

அனுராதபுரம் சிறையில் உண்ணா விரதத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் போராட்டம் பக்கம் 13 >>>

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் நேற்று விக்கி தரப்பு பூர்வாங்க ஆட்சேபனை

### அவர் பக்க வாதத்தை அடுத்து ஒக்.16 இற்கு ஒத்திவைப்பு

கொழும்பு, செப். 19

வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் மற்றும் இரு மாகாண அமைச்சர்களுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கு அடுத்த மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்குத் பக்கம் 13 >>>

## அனந்திக்கு ஆங்கிலம் தெரியுமா? நேற்று நீதிமன்றத்தில் சர்ச்சை!

கொழும்பு, செப். 19

வடக்கு மாகாணஅமைச்சர் அனந்தி சசிதரனுக்கு ஆங்கில மொழி தெரியுமா?

- இப்படி ஒரு சர்ச்சை நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விவாதிக்கப்பட்டது.

முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் மற்றைய இரு மாகாண அமைச்சர்களுக்கும் எதிரான நீதிமன்றஅவமதிப்புவழக்குகொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த சர்ச்சை கிளம்பியது.

"குற்றப்பத்திரமும் ஏனைய ஆவணங் பக்கம் 13 >>>

## டெனிஸ்வரனுக்கு சார்பான இடைக்கால உத்தரவு நீடிப்பு

கொழும்பு, செப்.19

வடக்குமாகாண அமைச்சர் பதவியில் டெனிஸ்வரன நீடிக்றார் எனத்தெரிவித்துகொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்கனவே விடுத்திருந்த இடைக்காலஉத்தரவுஎதிர்வரும் 17 ஆம் திகதி பக்கம் 14 >>>

## சரணடைந்த புலிகள் கொல்லப்படவில்லை

### கூறுகிறார் அமைச்சர் சமரசிங்க

கொழும்பு, செப். 19

இறுதிப்போரின்போது சரணடைந்த விடுதலைப்புலிகள் மற்றும் பக்கம் 14 >>>

## வல்வை. நகரசபை உறுப்பினர் சதீஸை தமிழரசுக் கட்சியிலிருந்து நீக்கத் தடை

யாழ்ப்பாணம், செப். 19

வல்வெட்டித்துறைநகர சபை உறுப்பினர் கந்தசாமி சதீஸை, இலங்கை தமிழரசுக்கட்சியின்உறுப்புரிமையிலிருந்து நீக்கும் கட்சித் தலைமையின் தீர்மானத் பக்கம் 13 >>>

# கைதிகளின் உண்ணாவிரதம் வெலிக்கடைக்கும் பரவுகிறது

கொழும்பு, செப். 19

தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம், வெலிக்கடைச் சிறைச்சாலைக்கும் பரவியுள்ளது எனச் சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகள் மோசமான நிலையில் இருப்பதாகவும், இவர்களின் விடயத்தில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றும் இந்தக் குழு வலியுறுத்தியுள்ளது.

சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழுவின் தலைவரான சட்டவாளர் சேனக பெரேரா இதுதொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அனுராதபுரச் சிறைச்சாலையில் 8 கைதிகள் ஆரம்பித்தஉண்ணாவிரதப்போராட்டத்தின்நிலைமை இப்போது புதிய திருப்பத்தை அடைந்துள்ளது.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து வைக்கலாம் என்று கருதி சிறை அதிகாரிகள், உண்ணாவிரதத்தை முன்னின்று நடத்துபவர்களில் ஒருவரான தில்லைராஜ் என்ற கைதியை வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றினர்.

ஆனால் தில்லைராஜ் வெலிக்கடைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

அவரைப் போன்று 30 வரையான கைதிகள் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களும் கூட உண்ணாவிரதப் போராட்டத்தில் இணைந்து கொள்வார்கள்.

இலங்கை அரசு இப்போது அனுராதபுரம், வெலிக்கடை என்று இரண்டு உண்ணாவிரதப் போராட்டங்களை உருவாக்கியுள்ளது.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள எட்டு கைதிகளும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் ஒவ்வொருவரும் வழக்கு விசாரணையின்றி ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாகச் சிறைகளுக்குள் இருக்கிறார்கள்.



நான் தில்லைராஜை சென்று பார்வையிட்டேன். அவர் மோசமாக நடத்தப்படுகிறார். சிறைச்சாலை மருத்துவமனைக்குக் கைவிலங்குடனேயே அனுப்பப்பட்டிருக்கிறார். இது கைதி ஒருவரின் உரிமையை மீறுகின்ற செயல்.

தமக்குத் துரிதமான புனர்வாழ்வு அளித்து விடுவிக்க வேண்டும் என்று அரசியல் கைதிகள் கோருகின்றனர். - என்றார்.

# பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்தி அறிக்கை விரைவில்



**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 19**

**பலாலி விமான நிலையத்தை, பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்யவுள்ளதாக இந்தியாவின் விமான நிலைய அதிகார சபை, அறிவித்துள்ளது.**

**இது தொடர்பாக இந்திய விமான நிலைய அதிகார சபைக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சுக்கும் இடையில் உடன்பாடு ஒன்று அண்மையில் கையெழுத்திடப்பட்டுள்ளது.**

இதற்கமைய, பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான விரிவான திட்ட அறிக்கையை இந்திய விமான நிலைய அதிகாரசபை தயாரிக்கும்.

இது தொடர்பான உடன்படிக்கையில், இந்திய விமான நிலைய அதிகாரசபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அனில் குப்தாவும், இந்திய வெளிவிவகார அமைச்சின் வங்காள விரிகுடா நாடுகளுக்கான இணைச் செயலர் சஞ்சய் பாண்டாவும் அண்மையில் கையெழுத்திட்டுள்ளனர்.

அனைத்துத் தொழில்நுட்ப மற்றும் காரணிகளையும் உள்ளடக்கியதாக இந்த விரிவான அறிக்கை தயாரிக்கப்படும் என்றும், 3 மாதங்களுக்குள் இந்த அறிக்கையைத் தயாரிக்கும் பணி நிறைவடையும் என்று எதிர்பார்ப்பதாகவும், இந்திய விமான நிலைய அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய விமான நிலைய அதிகாரசபை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்றில், விமான நிலைய அபிவிருத்தி மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான தமது ஆற்றலும், நிபுணத்துவமும், உலகளவில் கொண்டு செல்லப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பதாகக் கூறியுள்ளது.

# யாழ்ப்பாணம் இப்போது கல்வியில் பின்னடைவு

## வடக்கு ஆளுநர் குரே தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையின் கல்வித்துறையில் முன்னிலையில் இருந்த யாழ்ப்பாணம் தற்போது பின்னடைவைச் சந்தித்திருக்கின்றது. அது மீளவும் முன்னிலைக்கு வரவேண்டுமெனத் தெரிவித்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்துக்கு அரசியல்வாதிகள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கவேண்டுமென்றும் கூறினார்.

தமிழக அரசினால் யாழ். பொது நூலகத்துக்கு 50ஆயிரம் நூல்கள் கையளிக்கும் நிகழ்வு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலையே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலட்சக்கணக்கான பணம் செலவழித்து தமிழ் நாட்டிலிருந்து எங்களுக்கு வந்து இத்தனை ஆயிரம் புத்தகங்களைக் கொடுப்பது எமக்கு கிடைத்த பெரிய உதவியாகும். அறிவுத் தியாகம் தான் மிக முக்கியம். அது தான் வாழ்க்கைக்கும் உதவியாக அமையும்.

யாழ்ப்பாணம் கல்வியியே முன்னிலை வகித்தது. தற்போது பின்னடைவைச் சந்தித்திருக்கின்றது. ஆகவே மீளவும் அது முன்னிலைக்குச் செல்லவேண்டும். இங்குள்ள மக்களின் விடுதலைக்கு இருக்கின்ற ஒரே விடயம் கல்வி தான். கல்விதான் இங்குள்ள சொத்து.

யாழ்ப்பாணத்தில் படித்தவர்கள் தான் இந்த நாட்டின் பல இடங்களிலும் உயர் பதவிகளில் இருந்தனர் - இருக்கின்றனர். உலகத்திலும் இங்கு கற்றவர்கள் தான் முன்னிலைப் பதவிகளில் உள்ளனர். ஆகவே அவ்வாறு முன்னிலையிலிருந்த கல்வி தற்போது பின்னடைவில் இருந்தாலும் அதனை மீளவும் முன்னிலைக்குக் கொண்டுவரும் வகையில் இந்தியா வழங்கும் உதவிகள் மிக நல்லவை.

ஆகவே தமிழ் மக்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் அபிவிருத்தியிலும் முன்னேற்றமடைய வேண்டும். அதற்கு இங்குள்ள அரசியல்வாதிகள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும். இந்தியாவும் இலங்கையும் சேர்ந்து செயற்படுகின்றன. அதே போன்று தமிழகமும் வடக்கு மாகாணமும் சேர்ந்து செயற்படவேண்டும் - என்றார். (ஐ-7)

# வியன்னாவுக்கான தூதரை திருப்பி அழைத்தமை ஏன்?

## ஜனாதிபதி மைத்திரி விளக்கம்



ஒஸ்ரியாவுக்கான இலங்கைத் தூதுவர் மற்றும் அதிகாரிகளைத் திருப்பி அழைக்க உத்தரவிட்டமைக்கான காரணத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடந்த ஓசோன் நாள் நிகழ்வில் உரையாற்றியபோதே, வியன்னாவில் இருந்து இலங்கைத் தூதுவர் பிரியானி விஜேசேகர மற்றும் ஐந்து அதிகாரிகளை நாடு திரும்ப உத்தரவிட்டமைக்கான காரணத்தை வெளியிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: -

வியன்னாவில் இருந்த எமது தூதுவருடன் அதிகாரபூர்வ விடயம் சம்பந்தமாகப் பேச வேண்டியிருந்தது. எனது தொடர்பாடல் குழு, அவருடன் தொடர்பை ஏற்படுத்த நான்கரை மணி நேரம் முயன்றது.

தூதரகத்தில் இருந்த ஆறு தொலைபேசிகளுக்கும் அழைப்பை ஏற்படுத்தியபோதும், பதில் இல்லை.

இந்தத் தூதரகமே, வேறு நான்கு, ஐந்து நாடுகளுக்குமான பொறுப்பையும் கவனிக்கிறது.

ஆறு தொலைபேசி இணைப்புகளுக்கும் வரும் தொலைபேசி அழைப்புகளில் ஒன்றுக்கும் கூட அவர்கள் பதிலளிக்கவில்லை என்றால், அங்கு பணியாளர்கள் இல்லை என்றே அர்த்தம்.

அங்கிருந்து ஏனைய நாடுகளிலுள்ள பிரதிநிதிகள் எந்தத் தகவலையும் பெற முடியாது. அந்த முடிவை எடுப்பதற்கு இதுதான் காரணம்.

திருப்பி அழைக்கப்பட்டவர்கள், அடுத்த சில நாட்களில் நாடு திரும்புவார்கள். - என்றார்.

# இலங்கை ரூபாவின் பெறுமதி பெரு வீழ்ச்சி

தொடர்ச்சியாகச் சரிவைச் சந்தித்து வந்த, அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு, நேற்று வரலாறு காணாத வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

நேற்று இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள நாணயமாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனைப் பெறுமதி, ரூபா166.64 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு பெறுமதி, ரூபா 163.10 ஆகவும் இலங்கை மத்திய வங்கியினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயப் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சி கண்டுவருவதால், இறக்குமதிப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# புத்தர் உருவம் பொறித்த சேலை; சட்டத்தரணிக்கு எதிராக வழக்கு

புத்தரின்உருவம்பொறித்தசேலையை அணிந்திருந்த இளம் பெண் சட்டத்தரணிக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில்பொலிஸார் நேற்று வழக்குப் பதிவு செய்தனர்.

பெண் சட்டத்தரணிக்கு எதிரான குற்றப்பத்திரத்தை முன்வைக்கச் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுமதி வழங்குமாறு பொலிஸார் கோரியமைக்கு அமைய ஒப்புதல் வழங்கிய நீதிமன்றம், வழக்கை எதிர்வரும் ஜனவரி 14ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

புத்தரின் உருவம் பொறித்த சேலை அணிந்து வந்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் சட்டத்தரணி ஒருவரை யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்துக்குள் பொலிஸார் தேடினர்.

இந்தச் சம்பவம் கடந்த 12ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றது.

பொலிஸ்அவசர இலக்கமான 119இற்கு வந்த முறைப்பாட்டின் அடிப்படையில்தாம் அந்தச் சட்டத்தரணியிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளவேண்டும், அவரைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லவேண்டும் என்று அங்கிருந்த சட்டத்தரணிகளிடம் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் பொலிஸாரால் தேடப்பட்ட சட்டத்தரணி நீதிமன்ற வளாகத்திலிருந்து வீடு திரும்பியிருந்தார்.

இந்த நிலையில் நீதிமன்ற வளாகத்துக்குள் மீளவும் வருகை தந்த சம்பந்தப்பட்ட பெண் சட்டத்தரணியை யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவியான ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று வாக்குமூலம் வழங்க வைத்தார்.

எனினும் பெண் சட்டத்தரணி, பொலிஸ் நிலையத்துக்குச் சென்றிருந்த வேளை புத்தரின் உருவம் பொறித்த சேலையை அணித்திருக்கவில்லை.

இந்தியாவிலுள்ள நண்பர் ஒருவரால் எனக்குச் சேலை ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அதில்புத்தபெருமானுடைய உருவம்பொறிக்கப்பட்டுள்ளது என்று நான் அறிந்திருக்கவில்லை. புத்தரை அவமதிக்கும் எண்ணத்தில் நான் அந்தச் சேலையை அணிந்திருக்கவில்லை என்று இளம் பெண் சட்டத்தரணி தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்துக்கும் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும் இடையே எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய புத்தர் உருவம் பொறித்த சேலை அணிந்த விவகாரம் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தது.

எனினும் சம்பவம் இடம்பெற்று இரண்டு நாள்களின் பின், அந்தப் பெண் சட்டத்தரணியை நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்துப் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் தனது கைபேசியில் ஒளிப்படம் எடுத்த விவகாரம் பூதாகரமானது.

பெண் பொலிஸ் உத்தியோகத்தரின் கைபேசியைப் பெண் சட்டத்தரணி மிரட்டிப் பறித்தெடுத்தார் என்ற குற்றச்சாட்டு பொலிஸாரால் முன்வைப்பட்டது.

பொலிஸாரின் இந்த அத்துமீறல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் சங்கம் உறுதியாகத் தீர்மானித்தது. பெண் பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்வது தொடர்பிலும் சங்கம் ஆராய்ந்து வருகிறது.

இந்த நிலையில் பெண் சட்டத்தரணி, புத்தர் உருவம் பொறித்த சேலை அணிந்து வந்த விவகாரத்தைக் கையிலெடுத்த பொலிஸார், அதனை நீதிமன்றுக்குக் கொண்டு வந்துள்ளனர்.(ஐ-7)

## மஹிந்தவின் செய்தியுடன் நேற்றிரவு ஜெனிவா புறப்பட்டது வீரசேகர குழு

கொழும்பு, செப்.19

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வார இறுதியில் அமெரிக்காவுக்குப்பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆலோசனையில் பேரில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையிலான குழுவொன்று நேற்றிரவு அங்கு புறப்பட்டது.

போர்க்குற்றச்சாட்டுகளில் இருந்து இலங்கையை முற்றுமுழுதாக விடுவிக்குமாறு இம்முறை ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கவுள்ளளார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரி வித்திருந்தார். இதையடுத்து முடிந்தால் ஜனாதிபதி தாம் கூறியமைக்கிணங்க ஐ.நா. பொதுச் சபையில் உரையாற்றிக் காட்டட்டும் என்று சரத் வீரசேகர சவால் விடுத்திருந்தார் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

எதிர்வரும் 24ஆம் திகதி ஐ.நா. பொதுச் சபையில் ஜனாதிபதி உரை நிகழ்த்தவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பஸ் கட்டணங்கள் ஒருபோதும் அதிகரிக்காது

எரிபொருள் விலை அதிகரிப்பதனால் பஸ் கட்டணங்களை ஒருபோதும் அதிகரிக்கப்போவதில்லை. பஸ்கட்டணங்களை அதிகரிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள கால எல்லையிலேயே பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படும். அத்தோடு உலக சந்தையில் எரிபொருள்களின் விலை குறைவடையும்போது அதற்கேற்றமக்களுக்குச் சாதகமான நடவடிக்கைகளை அரசு எடுக்குமென ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

எரிபொருள்களின் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து கோதுமை மா மற்றும் கோது மா சார்ந்த உற்பத்திகளின் விலையும் அதிகரித்துள்ளது. அவற்றின் விலை அதிகரிப்பிலும் கட்டுப்பாடு கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ஜே.சி. அலவத்துவல தெரிவித்தார். (ஐ)

## கஞ்சாவுடன் கைதாகிய அந்தணர்கள் மறியலில்

கஞ்சா போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அந்தணர்கள் இருவரை எதிர்வரும் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கைதடி – கோப்பாய் வீதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரால் அந்தணர் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரிடமிருந்தும் தலா 850 மில்லிக்கிராம் எடை கொண்ட கஞ்சா பைக்கெற்றுக்கள் இரண்டு கைப்பற்றப்பட்டன.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் வசிக்கும் சந்தேகநபர்கள் இருவரும் தென்மராட்சியிலிருந்து வீடு திரும்பும் போதே கஞ்சா போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் கோப்பாய் பொலிஸார், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். சான்றுப்பொருள்களும் மன்றில் பாரப்படுத்தப்பட்டன.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொத்தம் மூன்று வழக்குகள்.

தம்மை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியமை தவறு எனத் தெரிவித்து டெனிஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததுதான் மூல வழக்கு.

அது தொடர்பில் விசாரணை நடத்திய மேன்முறையீட்டு நீதிமன்றம் டெனிஸ்வரன் இன்னமும் அமைச்சர் பதவியில் தொடர்கின்றார் எனத் தெரிவித்து அதனடிப்படையில் அவரைப் பணியாற்ற அனுமதிக்கும்படி ஓர் இடைக்கால உத்தரவை விடுத்தது.

அந்த இடைக்கால உத்தரவை ஆட்சேபித்து அதற்கு எதிரான மேன்முறையீடாக ஒரு வழக்கு முதலமைச்சர் சார்பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அது இரண்டாவது வழக்கு.

முதலாவது வழக்கில் வழங்கப்பட்ட இடைக்கால உத்தரவை நடைமுறைப் படுத்த தவறியமை மூலம் நீதிமன்றத்தை முதலமைச்சரும் ஏனைய இரு அமைச்சர்களும் அவமதித்துள்ளனர் எனத் தெரிவித்து டெனிஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தர்க்கல் செய்த வழக்கு மூன்றாவது.

ஆக, டெனிஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்குகள் இரண்டு. முதலமைச்சர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேன்முறையீட்டு வழக்கு – ஒன்று.

மாகாண சபையின் பதவிக் காலம் இன்னமும் ஆக ஏழே ஏழு வாரங்கள் தாம். 35 நாள்கள்.

இந்தக் காலத்துக்குள் இந்த மூன்று வழக்குகள் ஏதும் நடந்து முடிவதற்கான வாயப்புகளே இல்லை.

சபையின் பதவிக் காலம் முடிந்தாலும் வழக்குகள் தொடரத்தான் போகின்றன. அதுவும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஓர் இறுதியை எட்டும் வரைத் தொடரும் என எதிர்பார்க்கலாம்.

நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது அது குறித்து விமர்சிக்க முடியாது. ஆனால் நடப்புத்தகவல்களை ஓர் ஒழுங்கமைப்பில் வாசகர்களுக்கு வழங்க முடியும்.

நேற்று இந்த நீதிமன்ற அவமதிப்பு விவகார வழக்கில் முதல்வர் தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன், இந்த விடயத்தை விசாரிப்பதற்கு இந்த நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் இல்லை என்று ஒரு பூர்வாங்க ஆட்சேபனையை எழுப்பி வாதிப்பட்டார்.

இது ஒன்றும் புதிய விடயம் அல்ல.

'எல்லோரும் ஏறி விழுந்த நொண்டிக் குதிரையில் சக்கடத்தார் தானும் ஏறி விழுந்தாரம்' – என்ற பேச்சு மொழிதான் எனக்கு நினைவுக்கு வருகின்றது.

ஏற்கனவே, மாற்றுத் தரப்பின் சட்டத்தரணியான எம்.ஏ.சுமந்திரன் ஏறி விழுந்த பூர்வாங்க ஆட்சேபனை என்ற நொண்டிக் குதிரையில்தான் இப்போது கனகேஸ்வரன் சவாரி செய்கின்றார்.

சிங்கள நடிகரும் எம்.பியுமான ரஞ்சன் ராமநாயக்காவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளது. அதில் அவருக்காக ஆஜரான சுமந்திரன் அங்குமுன்வைத்து, சறுக்கிய பூர்வாங்க ஆட்சேபனையைத் தான் அவரது சட்டகுருவான ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன் இப்போது கையில் எடுத்திருக்கின்றார்.

வழக்கமாக நீதிமன்றங்களில் வழக்குகளை எப்படி நடத்துவது என்பதற்கு சட்டங்கள், ஒழுங்கு விதிகள், பிரமாணக் குறிப்புகள் உள்ளன. குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை, குடியியல் நடைமுறைச் சட்டக் கோவை போன்றவை இந்த வகையறாவைச் சேர்ந்தவைதான்.

ஆனால், உயர்நீதிமன்றத்திலும், மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளை எப்படி நடத்துவது என்பது தொடர்பாக சட்டவிதிகள், படிமுறை ஏற்பாடுகள், நடைமுறை ஒழுங்குகள் எழுத்தில் இல்லை. அவை இல்லாதமையால் உயர்நீதிமன்றமும், மேன்முறையீட்டு நீதிமன்றமும் அத்தகைய வழக்குகளை விசாரிக்கும் நியாயாதிக்கத்தை இன்னமும் பெற்றுக் கொள்ளவில்லை என்பதுதான் இப்போது கனகேஸ்வரன் முன் வைத்திருக்கும் பூர்வாங்க ஆட்சேபனை.

இந்த ஆட்சேபனையைத்தான் ரஞ்சன் ராமநாயக்கா வழக்கில் சுமந்திரனும் முன்வைத்துப் பார்த்தார். நீதிமன்றம் அதை ஏற்க மறுத்துவிட்டது.

லத்தீன் வாசகத்தில் ஒரு சட்ட நீதி உள்ளது.

'Cursus Curiae Est Lex Curiae' என்பதுதான் அந்த லத்தீன் சட்ட வாசகம். '*நீதிமன்றத்தின் வழமையான நடைமுறைகள் நீதிமன்றத்தின் சட்டமாகும்*' என்பதுதான் அதன் அர்த்தம். ஆங்கிலத்தில் கூறுவதானால் 'The Practice of the court is the law of the court' எனலாம்.

அதாவது, உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் நீதிமன்ற அவமதிப்புத் தொடர்பாக ஐம்பது ஆண்டுகளுக்குமேலாக ஒரு நடைமுறை உள்ளது. இது விடயத்தில் எழுதப்பட்ட சட்டங்கள், ஒழுங்குவிதிகள், படிமுறைகள், நடைமுறை ஏற்பாடுகள் இல்லாவிடினும், அவையின்றியே அந்த அவதூறு வழக்குகளை அந்த இரு நீதிமன்றங்களும் இவ்வளவு காலமும் விசாரித்து வந்திருக்கின்றன என்பதே நீதிமன்றின் வரலாற்று நடைமுறையாகும். '*நீதிமன்றத்தின் வழமையான நடைமுறைகள் நீதிமன்றத்தின் சட்டமாகும்.*' என்ற மேற்படி லத்தீன் வாசகத்தின் அடிப்படையில் அந்த வழக்கில் சுமந்திரனின் பூர்வீக ஆட்சேபனையை உயர்நீதிமன்றம் நிராகரித்தமையுடன் ரஞ்சன் ராமநாயக்காவுக்கு எதிரான வழக்கையும் விசாரணை செய்யத் தீர்மானித்து அதை முன்னெடுத்தது.

அதே சட்ட நொண்டிக்குதிரையைத்தான் இப்போது முதல்வரின் சட்டத்தரணியும் சுமந்திரனின் குருவுமான ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன் கையில் எடுத்திருக்கின்றார்.

சுமந்திரனுக்கு 'சீனியர்' என்பதால் இந்த சட்ட நொண்டிக்குதிரையில் ஏறும் கனகேஸ்வரன், தாம் விழுந்து விடாமல் அதில் நேர்த்தியாக சவாரி செய்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தமக்குச் சாதகமாகத் திருப்புவாரா என்பதைப் பொறுத்திருந்தான் பார்க்க வேண்டும்.

ஆனால், மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் மேம்பட்ட நியாயாதிக்கம் கொண்டதான உயர்நீதிமன்றம் இதே விடயத்தில் சுமந்திரனின் வாதத்துக்கு மாறான தீர்ப்பை அளித்திருக்கும்போது, அதே போன்ற வாதத்தை மேலும் சட்ட நுணுக்கங்களுடன் சிறப்பாகக் கனகேஸ்வரன் முன்வைத்தாலும், ஏற்கனவே உயர் நீதிமன்றம் இது விடயத்தில் வழங்கிய தீர்ப்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தைக் கட்டுப்படுத்தாதா, இது கனகேஸ்வரனின் வாதத்துக்கு ஆப்பாக வந்து விழாதா என்ற கேள்விகளும் உள்ளன.

கனகேஸ்வரனின் இந்த வாதத்தை நீதிமன்றம் ஏற்குமானால், இனி புதிய சட்டங்கள் யாத்து, சரியான முறைமை ஏற்படுத்தும் வரை மேன்முறையீட்டு நீதிமன்றமோ, உயர்நீதிமன்றமோ நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை விசாரிக்க முடியாமல் போகும். அந்த நீதிமன்றங்களின் தீர்ப்பை யாரும் உதாசீனப்படுத்தலாம். அதைத் தட்டிக் கேட்க முடியாத கையறு நிலைக்கு இரண்டு நீதிமன்றங்களும் செல்லும்.

ஆகையால், இந்தப் பூர்வாங்க ஆட்சேபனை விடயத்தில், ரஞ்சன் ராமநாயக்க வழக்கில் சுமந்திரன் வாங்கிய அதே 'குட்டை' முதல்வர் விக்கியின் வழக்கில் சுமந்திரனின் சீனியர் கனகேஸ்வரனும் வாங்கும் சாத்தியங்களே அதிகம் உண்டு என்பது எனது மதிப்பீடு.

நேற்று கனகேஸ்வரன் தமது வாதத்தின் இடையே ஒரு இடத்தில் 'தமிழனுக்கு ஆட்சி நிர்வாகம் செய்ய முடியாது என்றாகி விட்டது' – என விசனத்துடன் குறிப்பிட்டார்.

டாக்டர் சத்தியலிங்கத்துக்காக நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்த சுமந்திரன் எம்.பி. சடாரென எழுந்து *"ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன் தமது கட்சிக் காரரின் (முதலமைச்சர் விக்னேஸ்வரனின்) இயலாமையை ஒப்புக் கொண்டு கூறுகின்றாரா?"* – எனப் பட்டென்று கேட்டார்.

நீதிமன்றமே சிரிப்பில் ஆழ்ந்தது.

ஆக, வடமாகாண சபையின் ஆட்சிக் காலம் முடிந்தாலும் இந்த வழக்குகள் தொடர்கதையாக நீண்டு ஊடகங்களுக்கு நல்ல தீனி போடும் என்பது மட்டும் நிச்சயம்.

- மின்னல்-

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## படையினரைக் காப்பாற்ற பொது மன்னிப்பு முயற்சி!

அடுத்த மார்ச்சில் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடரில் யுத்தக் குற்ற விசாரணை தொடர்பாகப் பெரும் சர்வதேச நெருக்கடியை எதிர்கொள்ளவிருக்கும் இலங்கை. அதிலிருந்து தப்புவதற்காக குறுக்கு வழி மார்க்கம் ஒன்றை நாடவிருக்கின்றது என்ற தகவலைக் கடந்த ஞாயிறன்று இப்பத்தியில் கோடிகாட்டியிருந்தோம்.

அரசுத் தரப்பு நாடப்போகும் குறுக்குவழி யாது என்பதை ஏனைய ஊடகங்களை முந்திக்கொண்டு அன்றே நாம் இப்பத்தியில் வெளிப்படுத்தியுமிருந்தோம்.

*'தமிழர் தரப்பில் அரசியல் கைதிகளாக இருக்கும் அனைத்துத் தமிழர்களுக்கும் – குற்றம் சுமத்தப்பட்டவர்கள், குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கியபடி காவலில் இருப்போர், தண்டனை விதிக்கப்பட்டோர் என அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளுக்கும் – பொது மன்னிப்பு அளித்து விடுவிக்கும் அதேநேரம், அதே முறைமையில் படைத் தரப்பினருக்கு எதிரான யுத்த காலக் குற்றங்களையும் கவனத்தில் எடுக்காமல் அவர்கள் அனைவரையும் விடுவிக்கும் பொதுப் பிரகடனம் ஒன்றை விடுப்பதன் மூலம் இந்தப் பிரச்சினைகளுக்கு ஒரே சமயத்தில் – ஒரே தடவையில் – ஒரே முறையில் – தாம் தீர்வு காண விரும்புகின்றார் என்ற கோரிக்கைப் பிரகடனத்தையே தமது ஐ.நா. பொதுச்சபை உரையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுக்கக் கூடும் என சம்பந்தப்பட்ட தரப்புகள் எதிர்பார்க்கின்றன.*

*'அவ்வாறு பொது மன்னிப்பு அளிப்பதற்குத் தமக்குள்ள அதிகாரத்தைப் பிரயோகித்து இந்த விடயத்தைத் தாம் ஒரே தடவையில் தீர்த்து வைக்க விரும்புகின்றார் என்றும், அதற்கு உலகத் தலைவர்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் ஐ.நா. பொதுச் சபையில் ஜனாதிபதி கோருவார் என்றும் தெரிகின்றது.*

*'அப்படி ஜனாதிபதி அறிவித்தால் தமிழர் தரப்புக் காட்டப் போகும் எதிர்வினை யாது என்பதே கேள்வி.'*

– இவ்வாறு கடந்த ஞாயிறன்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

நாம் குறிப்பிட்டபடியே பொதுமன்னிப்புத் திட்டம் என்ற இராஜதந்திரக் காய் நகர்த்தலையே தனது சாணக்கிய நடவடிக்கையாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், அவரது அரசுத் தரப்பினரும் முன்னெடுக்கின்றனர் என்பது இப்பொது மெல்ல,மெல்லத் துலாம்பரமாகி வருகின்றது.

இது தொடர்பில் தனது எதிர்வினையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திட்டவட்டமாகவும், தெளிவாகவும் பிரதிபலித்துள்ளது.

முதலில் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். யார்,யார், என்னென்ன குற்றங்கள் இழைத்தார்கள் என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும். அதன் பின்னர் வேண்டுமானால் பொது மன்னிப்புக் குறித்துப் பரிசீலிக்கலாம் என்பதே கூட்டமைப்பின் நிலைப்பாடு.

கோர யுத்தத்தின் பின்னர், நல்லிணக்கத்தையும், சக வாழ்வையும், சௌஜன்ய நிலைமையையும் ஏற்படுத்து வதில் வெற்றிகண்ட தென்னாபிரிக்காவில் அத்தகைய அரசியல் சூத்திரமே இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வையும் அமைதியையும் ஏற்படுத்தக் காரணமாயிற்று.

படைத் தரப்பில் முகம் தெரியாத யுத்தக் குற்றவாளிகளுக்கும் சேர்த்துப் பொது மன்னிப்பு அளித்தல் என்ற சமாளிப்பு நடவடிக்கை மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி விடமுடியாது என சுமந்திரன் கூறும் வாதமே ஒட்டுமொத்தத் தமிழர்களின் நிலைப்பாடாகும்.

உண்மையைக் கண்டறிதல், பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துதல், நீதியை நிலைநாட்டுதல், மீள நிகழாமையை உறுதி செய்தல், இழப்பீடுகள் மற்றும் நிவாரணங்களை வழங்குதல் ஆகியவற்றின் தொடராக – அவற்றின் மூலம் ஏற்பட்ட நல்லிணக்கத்தின் அடிப்படையில் – இருதரப்புகளுக்கும் பொது மன்னிப்பு என்பது அத்தகைய நிலையை எட்டிய சூழலில் பரிசீலிக்கத்தக்க ஒன்றே.

யுத்தம் முடிந்து சுமார் பத்தாண்டுகளுக்குப் பின்னரும்பயங்கர வாதத் தடுப்புச் சட்டம் என்ற கொடூரமான – குரூரமான – நவநாகரிக வாழ்வியல் முறைமைகளுக்கு முரணான – காட்டுமிராண்டித்தனமான – மிலேச்சத்தனமான – ஒரு சட்டத்தை இன்று வரை நடைமுறைப்படுத்தி, யுத்தத்தில் சம்பந்தப்பட்ட ஒரு தரப்பான தமிழ்ப் போராளிகளை இதுவரை வாட்டி வதைத்து விட்டு, இப்போது ஒருதலைப்பட்சமாக பொது மன்னிப்பு மூலம் அனைவரையும் விடுவித்தல் என்ற பெயரில் படையினரைக் காப்பாற்ற முயல்கின்றமை அடாத்தான – அளாப்பல் – முயற்சியேயன்றி வேறில்லை.

## 20ஆவது திருத்தச் சட்டம்;

# நிலைப்பாட்டை சபாநாயகருக்கு அறிவிக்க உயர்நீதிமன்று முடிவு

கொழும்பு, செப். 19

20ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பிலான தமது நிலைப்பாட்டைச் சபாநாயகருக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

ஜே.வி.பி. நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த 20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலத்தை மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்ற வேண்டும் என உத்தரவிடுமாறு கோரி கூட்டுஎதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

இந்த மனுவுக்கு ஆதரவாகவும் எதிராகவும் தாக்கல் செய்யப்பட்ட 16 மனுக்களைக் கடந்த திங்கள் வரை நான்கு நாள்களாக உயர்நீதிமன்றம் பரிசீலனை செய்திருந் தது.

இந்த நிலையிலேயே இது தொடர்பிலான தனது நிலைப்பாட்டைச் சபாநாயகருக்கு அறிவிக்கவுள்ளதாக உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது. (கு)

# அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை உடனே அரசு நிறைவேற்றவேண்டும்

## சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கோரிக்கை

அரசியல் கைதிகளாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தங்களைக் குறுகிய கால புனர்வாழ்வு வழங்கி விரைவில் விடுவிக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த வெள்ளிக்கிழமை முதல் அனுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்து வரும் ஒன்பது பேரினதும் நியாயமான கோரிக்கையை அரசு உடனடியாக நிறைவேற்றுவதன் மூலம், அவர்களின் உயிரைக் காப்பாற்றவேண்டும் எனச் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

ஒன்பது வருடங்களுக்கு மேல் முறையான விசாரணையோ அல்லது விடுதலையோ இல்லாமல் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்த அரசியல் கைதிகளும் மனிதர்களே. அவர்களும் அன்பான குடும்பத்துடனும், பாசமான பிள்ளைகள், உறவினர்கள், சுற்றத்தாருடனும் மகிழ்வாக வாழப் பிறந்த இந்த நாட்டின் பிரஜைகளே. வேறு எந்தவொரு வழியுமற்ற நிலையில், மீண்டும் மீண்டும் அவர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து மேற்கொள்ளும் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு வழங்கவேண்டும்.

அத்துடன், அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையற்ற வகையில் உடனடியாக விடுவிக்குமாறும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விலக்கிக்கொள்ள கோரியும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற நாம், அரசியல் கைதிகள் என்ற பெயரில் சிறையில் அடைக்கப்பட்டு வாழ்வுரிமை மறுகப்படும் சமூக அநீதிக்கு எதிராகக் குரல்கொடுக்க இன, மத, மொழி, பிரதேச எல்லைகளைத் தாண்டி, மனிதாபிமானமுள்ள அனைவரையும் அணிதிரளுமாறு அழைத்துநிற்கின்றோம். - என்றுள்ளது. (ஐ)

# பலாலி விமான நிலையத்தை இந்தியாவுக்கு வழங்கவில்லை

## சபையில் கூறினார் நிமல் சிறிபாலடி சில்வா

பலாலிவிமான நிலையம் இந்தியாவுக்கோ அல்லது வேறு எந்த நாட்டுக்கோ வழங்கப்படாது என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வானூர்திமூலம் ஏற்றிச்செல்லல் சட்டமூலம்மீதான விவாதம் நடைபெற்றது.

இதன்போது, பலாலி விமான நிலையம் தொடர்பில் விமல் வீரவன்ஸவால் எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

பாலாலி விமானநிலையம் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக நீங்கள் (விமல்) கூறுவது அப்பட்டமான பொய்யாகும். அவ்வாறு எந்தவொரு முடிவையும் அரசு எடுக்கவில்லை. துறைசார் அமைச்சர் என்ற வகையில் பொறுப்புடனேயே இதை கூறுகின்றேன்.

சுற்றுலாத்துறை அமைச்சுடன் இணைந்து பலாலி விமானநிலையத்தை அபிவிருத்தி செய்வோம். உள்நாட்டு விமானசேவையை பலப்படுத்தவேண்டியுள்ளது. பலாலியில் மட்டுமல்ல கண்டி, திகண உட்பட ஏனைய பகுதிகளிலும் விஸ்தரிப்பு நடவடிக்கை இடம்பெறும்.

பலாலி விமானநிலையத்தின் அபிவிருத்திப்பணியை கூட இந்தியாவிடம் கையளிக்க நாம் விரும்பவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது மற்றுமொரு கேள்வியை எழுப்பிய விமல்வீரவன்ஸ,

நல்லாட்சியின் ஆயுள்முடிவடைவதற்குள் இந்தியாவுக்கு வழங்கப்பட்டால் உங்கள் அமைச்சுப் பதவியைத் துறப்பீர்களா என்று கேட்டார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், கற்பனை அடிப்படையிலும் குறுகிய அரசியல் நோக்கத்துடனும் எழுப்படும் கேள்விக்குப் பதிலளிக்கமுடியாது என்றார். (ஐ)

# ஹபரணையில் ரயில் மோதி ஐந்து யானைகள் உயிரிழப்பு



கொழும்பு, செப். 19

ஹபரணைப் பகுதியில் எரிபொருள் ஏற்றிச் சென்ற ரயிலுடன் யானைகள் மோதி விபத்திற்குள்ளானதில் ஐந்து யானை கள் உயிரிழந்தன. ரயிலும் தடம் புரண்டுள்ளது.

கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு எரிபொருள் ஏற்றிச் சென்ற ரயில், ஹபரணைக்கும் பலுகஸ்வெவ ரயில் நிலையத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று விபத்திற்குள்ளாகியது.

தண்டவாளத்தில் யானைகள் கூட்டமாக நின்றமையாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த யானைகளை அங்கிருந்து அப்புறப்படுத்தும் பணியில் வனவிலங்கு அதிகாரிகள் ஈடுபட்டனர்.

விபத்தின் காரணமாகக் கொழும்புக்கும் மட்டக்களப்புக்கும் இடையிலான ரயில் சேவையும் பாதிக்கப்பட்டது. (ஐ)

## நாளை

20.09.2018
வியாழக்கிழமை

நட்சத்திரம்: உத்தரம் பி.ப 4.00 வரை
திதி: ஏகாதசி பி.இ 2.31 வரை
சுபநேரம்: 7.35 – 9.03 வரை
இராகுகாலம்: 1.33 – 3.03 வரை

### உணவு விநியோகம் தொடர்பில்

# ஜனாதிபதி மைத்திரி வெளியிட்ட கருத்தால் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு இழுக்கு

கொழும்பு, செப். 19

இலங்கையின் தேசிய விமான சேவையில் வழங்கப்படும் உணவு தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள கருத்து சர்வதேச ரீதியாக சென்றடைந்துள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவையினால் தனக்கு வழங்கப்பட்ட முந்திரி பருப்பு மனித பாவனைக்கு உகந்தது அல்ல. அதனை நாய்க்கு கூட உணவாக வழங்க முடியாதென ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் கருத்து தென்னிலங்கை அரசியலில் பெரும் வாத, பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் ஜனாதிபதி கருத்து தொடர்பில் சர்வதேச ஊடகங்களும் கவனம் செலுத்தியுள்ளன.



ஜனாதிபதியின் எச்சரிக்கையை அடுத்து ஸ்ரீலங்கன் விமான சேவையில், பயணிகளுக்காக முந்திரி பருப்பு வழங்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தை உலக செய்தி சேவையான பி.பி.ஸி. முன்னிலைப்படுத்தி செய்தி வெளியிட்டுள்ளது. பி.பி.ஸி. தொலைக் காட்சியில் இந்த விவகாரம் தலைப்புச் செய்தியாக வெளியாகி உள்ளது.

ஏற்கனவே, ஸ்ரீலங்கன் விமான சேவைபெரும்நெருக்கடிகளுக்குமுகங்கொடுத்து வருகிறது. இந்நிலையில் சர்வதேச ரீதியாக அதன் பெயருக்கு தற்போது ஏற்பட்ட அவப்பெயர் பெரியதொரு விளைவுகளை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## எதிர்வரும் நாள்களில் நாடு முழுவதும் மின்சார விநியோகத்தில் தடை!

எதிர்வரும் நாள்களில் நாடு முழுவதும் மின்சார விநியோகத்தில் தடை ஏற்படலாம் என கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள வறட்சியான காலநிலையை தொடர்ந்து மின்சாரத்திற்கான கோரிக்கை அதிகரித்துள்ளது என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின் உற்பத்தி நிலையங்களுக்கு அருகில் உள்ள நீர்த் தேக்கங்களின் நீர் மட்டம் வேகமாக குறைவடைந்து வருகின்றது.

இதனால், அதிகளவான மின்சாரம், அனல் மின் உற்பத்தி நிலையங்களில் தயாரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலைமை மேலும் தொடர்ந்தால், இடைவிடாமல் மின்சாரம் வழங்குவதில் நெருக்கடி நிலை ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மின்சார தடை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, வறட்சியான காலநிலை நிலவும் தொடரும் பகுதிகளில் நீர் விநியோகமும் மட்டுப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாணவியின் ஆபாச காணொலியை இணையத்தில் வெளியிட்ட மாணவன் கைது!

பாடசாலை மாணவியின் ஆபாச காணொலியை இணையத்தில் வெளியிட்ட மாணவன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி பொலிஸ் பிரிவு மற்றும் சிறுவர் விவகார பணியகத்தால் பாடசாலை மாணவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாடசாலைமாணவியை ஆபாசமாக காணொலி பதிவிட்டு அதனை இணையத்தில் வெளியிட்டமை தொடர்பில் 17 வயதான பாடசாலை மாணவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை மாணவியை துஷ்பிரயோகம் செய்து அதனை வீடியோவாக பதிவிட்டு இணையத்தில்வெளியிட்டமாணவன், அந்த மாணவியைத் தொடர்ந்து பாலியல் நடவடிக்கையில் ஈடுபடுமாறு அச்சுறுத்தியுள்ளார்.

இந்த மாணவனுடன், 16 வயதான மாணவிக்கு காதல் தொடர்பு காணப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான காணொலி பதிவு செய்யப்பட்டுள்ளது.

காதலியான மாணவியை மீண்டும் மீண்டும் தனிப்பட்ட அறைக்கு வருமாறு மாணவன் அழைத்துள்ளார். எனினும்அதற்கு மாணவி மறுத்தமையினால் அந்த காணொலியை மாணவன் நண்பர்களுடன்பகிர்ந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து அவர் அதனை இணையத்தில்வெளியிட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இலங்கை - தமிழகத்திற்கு இடையில் உறவை கட்டியெழுப்ப நடவடிக்கை!

### செங்கோட்டையனிடம் கரு தெரிவிப்பு

கொழும்பு, செப். 19

பல தசாப்தங்களுக்கு பின்னர் இலங்கைக்கும், தமிழகத்திற்கும் இடையிலான உறவை கட்டியெழுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் முதல்தடவையாக இலங்கை அரசின் உயர்மட்ட குழு தமிழகம் செல்லவுள்ளது என இலங்கையின் நாடாளுமன்ற சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

கண்டியில் கடந்த வார இறுதியில் எம்.ஜி.இராமச்சந்திரனின் 102 ஆவது பிறந்த தின நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன.

இந்த நிலையில் இந்த நிகழ்வில் பங்கேற்ற தமிழக கல்வி அமைச்சர் செங்கோட்டையனிடம், கரு ஜெயசூரிய இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

## மின் தடை

யாழ்ப்பாணம், செப். 19

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**வவுனியா பிரதேசத்தில் -**

தவசிக்குளம் கிராமம், அண்ணா நகர், சிறீ நகர், பூந்தோட்டம் கைத்தொழிற்பேட்டை, புளிதறித்த புளியங்குளம், செக்கட்டிப்புலவு வீட்டுத்திட்டம், புளிதறித்த புளியங்குளம் வீட்டுத்திட்டம், பட்டாணிச்சூரிலிருந்து மதவுவைத்த குளம் வரை ஆகிய பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## மாகாணத் தேர்தலில் களமிறங்கும் தீர்மானம் இதுவரையிலும் இல்லை!

### கிழக்கின் முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட்

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் களமிறங்கும் தீர்மானத்தை இதுவரை எடுக்கவில்லை என தெரிவித்துள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட், சொந்த தொழில் சார்ந்த விடயங்களில் முழு நேரம் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் கிழக்கு முதலமைச்சராக பதவி வகித்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திகளை சீராக முன்னெடுத்ததுடன் அதற்கான நிதி மூலங்களை பல்வேறு வழிகளிலும் பெற்றுக்கொடுக்கமுடிந்தது. ஆனால் தற்போது அபிவிருத்தி என்பது வெறும் பூச்சியமாகவே உள்ளது.

ஒருபக்கம் அபிவிருத்தியை முன்னெடுத்த அதேவேளை, மறுபக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் வளர்ச்சிப் பாதைக்கும் கொண்டு செல்ல முடிந்தது.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் கல்குடாவின் மாகாணசபை பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட ஒன்றிணைந்து பணியாற்றவும் அதனை பெற்றுக்கொடுப்பதற்கான பல்வேறு வழிகள் குறித்தும் ஆராய்ந்து வருகின்றேன்.

ஏறாவூரில் அமையப்பெற்ற தொழிற்சாலையைப் போன்று இப்பிரதேச யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினைகளுக்கு முடிவு காணும் வகையில் தொழிற்சாலைகளை எதிர்காலத்தில் உருவாக்க திட்டமிட்டுள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

## ஜீப் மோதியதில் மாணவி பலி!

புத்தளம் - குருநாகல் வீதியில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவியொருவர் பலியாகியுள்ளார்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை பாடசாலை விட்டு வீடு செல்லும் போது இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை நிறைவடைந்த நிலையில் 3 மாணவிகள் பஸ்ஸிலிருந்து இறங்கி பாதை ஓரமாக நடந்து சென்றபோது அந்த வீதியால் சென்ற ஜீப் மாணவி மீது மோதியுள்ளது.

விபத்தில் காயமடைந்த மாணவி உடனடியாக புத்தளம் போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் மற்றைய இரு மாணவிகளுக்கும் காயம் எதுவுமின்றி உயிர் தப்பியுள்ளபோதும் அவர்கள் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர்.

உயிரிழந்த மாணவி கொட்டுக்கச்சி நவோயா மகா வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி கற்கும் 14 வயதுடைய மகாநாயக்க முதியான்சலாகே துனீஷா ஓந்தி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விபத்திற்கு காரணமான ஜீப் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டு, 21 வயதான சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

## மலவாயிலில் மறைத்து வைத்து ஹெரோயின் கடத்திய மூவர் கைது!

### காரைதீவில் பஸ்ஸை மறித்து சோதனையிட்ட போது

ஹெரோயின் போதைப்பொருள் கொண்டு சென்ற குற்றச்சாட்டின் பேரில் மூன்று சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருகோணமலையிலிருந்து அம்பாறை சென்ற தனியாருக்குச் சொந்தமான குளிரூட்டப்பட்ட பஸ்ஸில் மலவாயிலில் மறைத்து ஹெரோயின்போதைப்பொருள் கொண்டு சென்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட 3 சந்தேகநபர்களையும், தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்டு வருகிறது என சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.கே. இப்னு அசார் தெரிவித்தார்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் காரைதீவு பிரதேசத்தில் வைத்து பஸ்ஸை நிறுத்தி சோதனை செய்த போது, மூன்று நபர்களும் மலவாயிலில் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்த நிலையில் ஹெரோயின் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட நபர்களை சோதனைக்குட்படுத்தியபோது ஒருவரிடம் 04 கிராம் 110 மில்லிகிராமும், இரண்டாவது நபரிடம் 03 கிராம் 36 மில்லிகிராமும், மூன்றாவது நபரிடம் 845 மில்லிகிராமும் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ள ன.

சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எச்.எம்.எம். பஸீல் முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர்செய்தபோது மூன்றுநாள்களுக்குதடுத்துவைத்து விசாரணை செய்வதற்கு கட்டளை பிறப்பித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# 67 வருடங்களாக கட்டி வைக்கப்பட்டுள்ள பந்துலவை விடுவிக்குமாறு கோரிக்கை!

கொழும்பு, செப்.19

தெஹிவளை விலங்கினசாலையில் இருந்து பந்துல என்ற யானையை விடுவிக்குமாறு இந்திய அமைச்சரும், விலங்கின உரிமை நடவடிக்கையாளருமான மேனகா காந்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கடிதம் மூலம் இந்தக் கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

பந்துல என்ற யானை கடந்த 67 வருடங்களாக சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அதற்குக் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

எனவே, இந்த யானையை ரிதியாகம தேசிய பூங்காவுக்குள் சுதந்திரமாக விடுமாறு மேனகா காந்தி இலங்கை ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

# மனித அபிவிருத்தி சுட்டெண் பட்டியலில் முன்னேற்றம் கண்டுள்ளது இலங்கை!

இலங்கை உயர்ந்த மனித அபிவிருத்தி உடைய நாடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

உலகளாவிய மனித அபிவிருத்தி சுட்டெண் பட்டியலில் இலங்கை பூச்சியம் தசம் ஏழு -ஏழு புள்ளிகளைப் பெற்று 189 நாடுகளில் 76 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

1990 ஆம் ஆண்டிற்கும், 2017 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கையின் மனித அபிவிருத்தி சுட்டெண் புள்ளிகள் 23 சதவீதத்திற்கு மேலான வளர்ச்சியை பதிவு செய்துள்ளன. இந்தச் சுட்டெண்ணின் மூலம் கல்வி, சுகாதாரம், வருமானம் முதலான துறைகள் சார்ந்த தேசிய மட்ட பெறுபேறுகள் அளவிடப்படுகின்றன. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டப் பிரிவு சுட்டெண்ணைக் கணிக்கிறது.

இந்த காலப்பகுதியில் இலங்கை மக்களின் ஆயுட்காலம் ஆறு ஆண்டுகளால் வளர்ச்சி கண்டுள்ளது. மாணவர்கள் பாடசாலை செல்லும் காலப்பகுதியும் உயர்ந்துள்ளது.

மனித அபிவிருத்திச் சுட்டெண் பட்டியலில் நோர்வே, சுவிற்சர்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் முதலிடம் பெற்றுள்ளன. நைஜர், மத்திய ஆபிரிக்க குடியரசு, தென்சூடான் ஆகியவை ஆகக்குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளன.

# தினசரி ராசி பலன் (19.09.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் 3 ஆம் நாள். புதன்கிழமை. தசமித்திதி இரவு 10.40 மணி வரை பின்னர் ஏகாதசி. நட்சத்திரம்: பூராடம் பகலட 10.35 மணி வரை பின்னர் உத்தராடம். அமிர்த சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - பகல் 12.04 மணி முதல் 1.35 மணி வரை.

**சுபநேரம்** - மாலை 4.32 மணி முதல் 6.02 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - புரட்டாதி மாத வளர்பிறை தசமி.

**'ஜோதிடமணி' பிரம்மஶ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** ஆக்கபூர்வமான நாள். பணம் சரளமாகப் புழங்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். தந்தை வழி உறவினர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைத்து மகிழ்ச்சி அடைவார்கள்.

**ரிஷபம்** கவலையான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். தேவையற்ற செலவுகளைச் செலவுகளால் கடன் படும் நிலை உண்டாகும். மாணவர்களின் பரபரப்பும், இனம் தெரியாத பயமும் குடிகொள்ளும்.

**மிதுனம்** மத்திம பலன்கள் காணப்படும். பொருள் வரவு சுமாராக இருக்கும். செலவுகள் அதிகரிக்கும். தேக நிலை பாதிப்படையும். வைத்தியச் செலவுகள் ஏற்படும். வியாபாரம் சுமாரான லாபத்தைத் தரும்.

**கடகம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். உடல் நலம் சிறப்பாக அமையும். பொன், பொருள் சேரும். திருமணம் போன்ற சுப முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்களால் லாபம் கிடைக்கும்.

**சிம்மம்** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப ஒற்றுமை மேம்படும். உத்தியோக மேன்மை உண்டாகும். செய்யும் தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும்.

**கன்னி** துன்பமான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படும். உடல் நலத்தில் பாதிப்புக்கள் உண்டாகி மருத்துவச் செலவுகளை எதிர் கொள்ள நேரும்.

**துலாம்** விருத்தியான நாள். எடுக்கும் முயற்சிகள் வெற்றி அடையும். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். சிலருக்கு புது வாகனம் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். செய்யும் தொழில் விருத்தியடையும்.

**விருச்சிகம்** மேன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். உற்றார், உறவினர்களின் ஆதரவு மகிழ்ச்சி தரும். உத்தியோகத்தர்களுக்கு கௌரவமான பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் கிடைக்கும்.

**தனுசு** நன்மையான நாள். வருமானம் தேவைகளைப் பூர்த்தி செய்யும். இன்றைய பணிகளில் சுறுசுறுப்பாக செயற்படுவார்கள். பயணங்களால் ஆதாயம் கிட்டும். புதிய தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும்.

**மகரம்** யோசனையான நாள். வருமானம் பற்றாக்குறையாக இருக்கும். செலவினங்கள் கட்டுக்கடங்காமல் போகும். உற்றார், உறவினரால் சிறுசிறு மனச் சஞ்சலம் தோன்றும். பிறர் விஷயங்களில் தலையிட வேண்டாம்.

**கும்பம்** கீர்த்தியான நாள். பணம் சரளமாகப் புழங்கும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் திறம்பட செயல்பட்டு அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள்.

**மீனம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சரிசமமாக இருக்கும். உடலில் ரோகங்கள் உண்டாகும். எண்ணிய காரியம் தடை. தாமதம் ஆகும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் குறையும்.

**சந்திராஷ்டம நாள்: கார்த்திகை 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# மறைந்த அதிபருக்கு அஞ்சலி



முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியில் கடமையாற்றி உயிர் நீத்த பாடசாலை அதிபர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலையில், குறித்த கல்லூரியில் கடமையாற்றி மறைந்த அதிபர்களின் உருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவித்து, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

வித்தியானந்தா கல்லூரியின் முதல் அதிபர் யு.கு.மு. ஞானப்பிரகாசம் செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி இறைபதமடைந்த நிலையில் இந்த நாளிலேயே வருடந்தோறும் அஞ்சலி நிகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த அஞ்சலி நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்திருந்தனர்.

# இ.போ.ச சாரதி மீது தாக்குதல் நடத்த முயற்சி!

வவுனியா - பூந்தோட்டம் பகுதியில் வைத்து இ.போ.ச சாரதி மீது தாக்குதல் நடத்த, அடையாளம் தெரியாத நபர்கள் முயற்சித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 5.00 மணியளிவில் இடம்பெற்றுள்ளதுடன், மோட்டார்சைக்கிளில் வந்தவர்களே தாக்க முயற்சித்துள்ள னர் எனத் தெரியவருகிறது.

மதீனா நகரிலிருந்து வவுனியா இ.போ.ச. சாலைக்கு கடமைக்காக மோட்டார்சைக்கிளில் ஏ.ஆர்.பசிர் (வயது 34) சென்று கொண்டிருந்தபோதே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதன்போது அந்த நபர்கள் தனியார் 'பஸ்ஸுக்கு எதிராகவா ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கின்றாய்', என அச்சுறுத்தல் விடுத்துள் ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அந்தச் சாரதி அவர்களிடமிருந்து தப்பித்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான முறைப்பாடுகள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# விறகு எடுக்கக் காட்டுக்குச் சென்ற நபரை மோசமாக தாக்கியது கரடி!

## பலத்த காயங்களுடன் அவர் ஆஸ்பத்திரியில்

திருகோணமலை, செப்.19

திருகோணமலை - கந்தளாய் பிரதேசத்தில் விறகு எடுக்க காட்டிற்குச் சென்றவர் கரடி தாக்கி பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ள நிலையில் காயமடைந்த நபர் கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் கந்தளாய், கோவில் கிராமம் பகுதியை சேர்ந்த என்.ஆனந்தராசா (வயது 49) என்பவரே பலத்த காயங்களுக்கு இலக்காகியுள்ளார்.

மோட்டார்சைக்கிளில் கந்தளாய் சீனிஆலை காட்டுப் பகுதிக்கு தனிமையில் சென்று விறகுகளை வெட்டிக் கொண்டிருக்கும் போதே கரடி தாக்கியுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை கந்தளாய் வைத்தியசாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பாண் விலை உயராது

பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திகளின் விலைகளை அதிகரிப்பதெனத் தீர்மானிக்கவில்லை என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

விலை அதிகரிக்குமாறு கோருவது நியாயமானது அல்லவென சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். எவரேனும் சட்டவிரோதமான முறையில் பாணின் விலையை அதிகரித்திருந்தால் அது பற்றி நுகர்வோர் அதிகார சபைக்கு முறையிடுமாறு அவர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# கைதடி நுணாவில் கமக்கார அமைப்பில் உரப் பதிவும், அடையாள அட்டைப் பதிவும்

கைதடி, செப்.19

கைதடி நுணாவில் கமக்கார அமைப்பில் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் உரம் வழங்குவதற்கான பதிவும் கமக்கார அட்டைப் பதிவும் இன்று இடம்பெறும்.

மானிய அடிப்படையில் உரத்தைப் பெற விரும்புபவர்கள் தேசிய அடையாள அட்டையின் ஒளிப்படப் பிரதி மற்றும் சந்தாப் பணம் என்பவற்றைக் கொண்டு வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதே நேரம் புதிதாக விவசாயம் செய்பவர்கள் கடவுச் சீட்டுக்குப் பயன்படும் ஒளிப்படம், தேசிய அடையாள அட்டையின் ஒளிப்படப் பிரதி காணியின் உறுதிப் பிரதி, காணி குத்தகைக்கு எடுக்கப்பட்டிருப்பின் உரிமையாளரின் கடிதம் மற்றும் சந்தாப்பணம் என்பவற்றுடன் வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கமக்கார அடையாள அட்டையைப் பெற விரும்புபவர்கள், தேசிய அடையாள அட்டையின் ஒளிப்படப் பிரதி, கடவுச் சீட்டுக்குப் பயன்படும் ஒளிப்படம், கடந்த வருடம் உர மானியம் பெற்ற பதிவுச் சான்றிதழ், வயல்களுக்கான பதிவுகளுக்கான சான்றிதழ் என்பவற்றுடன் கமக்கார அமைப்புக்கு இன்று வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. (இ)

### பிரதிப் பொலிஸ் மா அதிபரின் சதி விவகாரம்:

# மைத்திரி, கோட்டாபயவிடம் வாக்குமூலம் பெற ஏற்பாடு

கொழும்பு, செப்.19

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட ஐந்து பேரிடம் எதிர்வரும் நாள்களில் வாக்குமூலங்கள் பெற்றுக்கொள்ளப்பட உள்ளன எனத் தெரியவருகிறது.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வா, ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரை கொலை செய்ய சதித் திட்டம் தீட்டிய குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தும் குற்றப்புலனாய்வுத் திணைக் களம் இவ்வாறு வாக்கு மூலங்களைப் பெற்றுக் கொள்ள உள்ளது.

ஜனாதிபதி, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் தவிர, பொலிஸ் திணைக் களத்தின் சில சிரேஷ்ட அதிகாரிகளிடமும் வாக்கு மூலங்கள் பெற்றுக்கொள் ளப்பட உள்ளன.

இந்தக் கொலை சதி முயற்சி பற்றிய விவரங்களை வெளியிட்ட நாமல் குமாரவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் விசாரணை நடத்தியுள்ளனர்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர்களான எம்.ஆர்.லத்தீப், நந்தன முனசிங்க, நிலந்த ஜயவர்தன, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸ், பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜனகாந்த ஆகியோரிடம் இவ்வாறு விசா ரணை நடத்தப்பட உள்ளது.

இதேவேளை, செல்லிடப்பேசி தொடர் பாடல் குறித்த விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

தொலைபேசி உரையாடலுடன் தொடர் புடைய பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வாவின் குரலும் தொலைபேசி உரையாடலில் காணப் படும் குரலும் ஒன்றா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

# ஏறாவூர் பகுதியில் சடலம் மீட்பு!



ஏறாவூர் பகுதியில் கணபதி கிராமத்தைச் சேர்ந்த காந்தலிங்கம் உதயகுமார் (வயது 48) என்பவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள் ளார் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குடும்பத் தகராறு காரணமாக தன் மனைவியையும் பிள்ளைகளையும் விட்டுப் பிரிந்து தனது தாயுடன் வாழ்ந்து வந்த இவர் ஒரு கட்டடத் தொழிலாளி என்றும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள து என தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத் தக்கது.

# அமெரிக்கா அழைப்பின் பேரில் ட்ரம்பை சந்திப்பார் மஹிந்த



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்திக்கவுள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது.

இந்தக் கலந்துரையாட லுக்கான உத்தியோகபூர்வ அழைப்பை அமெரிக்கா வெளி யிட்டுள்ளது என கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளி யிட்டுள்ளது.

சந்திப்புக்கான உத்தியோக பூர்வ தினத்தை அமெரிக்க இராஜாங்க திணைக்களம் விரைவில் அறிவிக்கும் என அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவுக்கு செல்ல வுள்ள மஹிந்த, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உட்பட இராஜதந்திரிகளைச் சந்திக்கவுள்ளார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் பாதுகாப்பு செய லாளர் கோட்டாபாய ராஜபக்ஷ போட்டியிடவுள்ளார் என மறைமுகமாக மஹிந்த அறி வித்திருந்தார்.

இந்நிலையில், கோட்டா பயவின் அரசியல் செயற்பாடு குறித்து அமெரிக்க ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளதாக உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை - அமெரிக்க பிரஜாவுரிமைகளை கொண்டவர் என்பதால், டொனால்ட் ட்ரம்புடனான பேச்சு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

இதேவேளை, கடந்த வாரம் இந்தியாவுக்கு விஜயம் மேற் கொண்டிருந்த மஹிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் உள்ளிட்ட பல முக்கியஸ் தர்களையும் சந்தித்து பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரு பொலிஸார் விபத்தில் பலி!

அநுராதபுரம், ஹபரண வீதியின் கல்கமுவ பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் கெப் ரக வாகனம் மோதியமையினாலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றதாக தெரிவிக்கும் பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### வெலிக்கடை மோதல் சம்பவம்:

# நியோமல், எமில் ரஞ்சனின் விளக்கமறியல் நீடிப்பு!



வெலிக்கடை சிறைச்சாலை மோதல் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியகத்தின் நியோமல் ரங்க ஜீவ மற்றும் சிறைச்சாலைகள் முன்னாள் ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவா ஆகியோருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல் நீடிக்கப் பட்டுள்ளது.

இவர்கள் இருவரையும் நேற்றையதினம் கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போதே அவர்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி வரையில் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப் பட்டது.

கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தையடுத்து 27 கைதிகள் பலியாகினர்.

இதையடுத்தே இந்தச் சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் முன்னாள் ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவா மற்றும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியகத்தின் இன்ஸ்பெக்டர் நியோமால் ரங்கஜீவ ஆகியோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையை தீர்க்க அமைச்சு மட்டத்தில் நடவடிக்கை!

ஆசிரியர் சேவை சார்ந்த சம் பளப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அமைச்சு மட்டத்தில் யோசனை யொன்றை வரையுமாறு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பல வருட காலமாக முறையற்ற விதத்தில் முன்னெடுக் கப்பட்ட நடவடிக்கைகளால் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை ஏற்பட் டுள்ளன.

இதனால், வேறு பல பிரச்சினைகளும் எழுந்துள்ளன. இதனைக் கருத்திற்கொண்டு ஆசிரியர்களின் தொழில்கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் பிரச்சி னைகளைத் தீர்க்



குமாறு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவ சம் அதிகாரிகளுக்குஆலோசனைவழங்கியுள்ளார்.

இந்த முயற்சியில் தொழிற் சங்க அமைப்புக்கள் உட்பட சகல தரப்புக் களினதும் கருத்துக்களைப் பெறு மாறு அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

# தரம் 5 புலமைப்பரிசில் தொகையை அதிகரிக்க நடவடிக்கை!

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் தொகையை அதிகரிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் விரைவில் அமைச்சரவை பத்திரம் முன் வைக்கப்பட உள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதன்மூலம் புலமைப்பரிசில் பெறுவோரின் எ ண்ணிக்கையையும் இரு மடங்காக அதிகரிப்பதற்கு எதிர்பார்த்துள் ளோம் என கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், தற்போது வெளியாகவுள்ள புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளுக்கமைய புலமைப்பரிசில் பெறுவோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட உள்ளது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# சிங்கப்பூர் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தினால் டொலர் விலை அதிகரிப்பதைத் தடுக்க முடியாது!

### பந்துல குணவர்தன தெரிவிப்பு

சிங்கப்பூர் உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப் படுத்தினால் டொலர் ஒன்றின் விலை 200 ரூபாவாக அதிகரிப்பதைத் தடுக்க முடியாது என கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலா நிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நேற்றுக் காலை தனியார் வானொலிச் சேவையொன்றில் இடம்பெற்ற நேரடி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

நாட்டிலிருந்து வெளியேறும் நிதிப் பெறுமானம் அதிகரிக்கும் போது ரூபாவின் பெறுமதி குறைந்து டொலரின் பெறுமானம் அதிகரிக்கும் என்பது பொதுவான ஒன்றாகும்.

சிங்கப்பூர் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தாமல் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் அரசாங்கத்தின் பொரு ளாதாரக் கொள்கை நடை முறைப்படுத்தப்பட்டு வந்தாலே டொலர் ஒன்றின் விலை 170 ரூபாவை அடைந்து விடும்.

நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய பொருள் களின் எண்ணிக்கையை அதிகரித்து, வெளிநாட்டுச் செலாவணியை அதிகரிப்பதே டொலரின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த முடியுமான ஒரே வழி எனவும் அவர் மேலும் கூறினார்.






வடக்கு மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் தனது 2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கு ரூபா ஒரு லட்சம் பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

மேற்படி பாடசாலைச் சமூகத்தினரின் கோரிக்கைக்கு அமைவாக நேரில் பாடசாலைக் குச் சென்று பார்வையிட்ட வடக்கு மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கு விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்து, நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊர்காவற்றுறை பிரதேசசபை உறுப்பினர்களான ஞானகரன் லக்ஸ்மன், கந்தையா சகாதேவன் மற்றும் சுதர்சன் இரத்தினமாலா ஆகியோர் களூடாக பாடசாலையில் வைத்து வழங்கினார்.

பாடசாலை அதிபர் அருட்பணி சிங்கராயர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (இ






வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகமும், சனசமூக நிலையமும் இணைந்து மறைந்த நட்சத்திர வீரர்கள் ஞாபகார்த்தமாக நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழகம் வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றியது.

பதினான்கு அணிகள் பங்குபற்றிய இப்பபோட்டித்தொடரின் இறுதிப்போட்டியில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது. வட்டக்கச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நான்கு நாள்கள் நடைபெற்ற உதைபந்தாட்டச்சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டிருந்த அதேவேளை மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (இ

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் யாழ்.- கிளிநொச்சி உலமா சபை ஏற்பாட்டில் இஸ்லாமிய புத்தாண்டு - 1440 ஹிஜிரி - முஹர்ரம் ஆரம்ப நாள் நினைவு தினம் கல்லூரி அதிபர் சேகு ராஜிது தலைமையில் இடம்பெற்றது. அந்த நிகழ்வின்போது...
(உ - 19)
படம் :- எம்.எல்.லாபிர்




'யாழ்ப்பாணம் மாநகர சபை பிரிவுக் குட்பட்ட குளத்தடி பள்ளிவாசல் அருகே காணப்படும் பெரிய குளம் சிறிய குளம் ஆகியவற்றை துப்புரவு செய்வதற்கான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்விரு குளங்களும் தூர்வையற்று காணப்படுவதாக ஊடகங்களில் முன் வைக்கப்பட்டுள்ள செய்தி தொடர்பில் ஆராயும் முகமாக அப்பகுதிக்கு சென்ற யாழ் மாநகர சபையின் பதில் முதல்வர் துரைராசா ஈசன் மாநகர சபை உறுப்பினர் கே.எம் நிலாமுடன் இணைந்து பார்வையிட்டுள்ளார்.

அத்துடன் பதில் முதல்வர் இவ்விரு குளங்களையும் துப்புரவு செய்து மக்கள் பாவனைக்கு வழங்குவேன் எனத் தெரிவித்துள்ளார்.

இதுதவிர மாநகர சபை எல்லைக் குட்பட்ட 30க்கும் அதிகமான கால்வாய்கள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன எனவும் குறிப்பாக நீரேந்து பகுதிகளை கவனிக்க விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

1990 ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் இக்குளங்களை தமது அத்தியாவசியத் தேவைகளுக்காக பயன்படுத்தி வந்த நிலையில் போர்ச் சூழல் காரணமாக உரிய பராமரிப்பின்றி அழிவடைந்து காணப்படுகின்றன என்றும் குறிப்பாக அப்பகுதி மக்கள் குளிப்பதற்கு முக்கியமாக பயன்படுத்தி வந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளதுடன் இந்த குளங்களை மீளவும் துப்புரவு செய்து சீராக்கி தருமாறு தகுதி வாய்ந்த அதிகாரிகளைக் கேட்டிருந்தனர்.

இக்குளத்தின் அருகே ஜனாஸா நல்லடக்கம் செய்யும் இடம் காணப்படுவதனாலும் நல்லடக்கத்தில் கலந்து கொள்பவர்கள் குளிப்பதற்கும் பெரிதும் உதவும் எனவும்தற்போதைய அரசாங்கத்தில் 1000 குளங்கள் அபிவிருத்தி என்ற திட்டம் அமுல் படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் இக்குளத்தையும் துப்புரவு செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ





# கடல்வாழ் உயிர்களை காவு கொண்டு வரும் பிளாஸ்டிக் 'அரக்கன்'!

## என்ன தான் தீர்வு?

கடலில் வாழும் நுண்ணுயிர்கள் முதல் மிகப்பெரிய திமிங்கலம் வரை பிளாஸ்டிக்கை உண்கின்றமையைக் கேள்விப் படுகிறோம்.

கட்டுப்படுத்தாவிட்டால், கடலில் கலக்கும் பிளாஸ்டிக் கழிவுகளின் அளவு அடுத்த பத்தாண்டுகளில் மும்மடங்காகும்.

அதற்குக்காரணம்பிளாஸ்டிக்பார்க்க அந்த உயிர்களின் உணவைப் போலவே காட்சியளிப்பது மட்டுமல்லாது, அவற்றின் உணவைப் போன்ற மணத்தையும் கொண்டுள்ளன.

நீரிலிருந்து எடுத்த ஒரு பிளாஸ்டிக் துண்டை நுகர்ந்து பாருங்கள். அதில் மீன் போன்றே வாசனை வரும், என்கிறார் றோயல் நெதர்லாந்து இன்ஸ்டிட்யூட் ஆஃப் சீ ரிசர்ச் எனும் கடல்வாழ் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த சூழலியல் ஆய்வாளர் எரிக் ஜெட்லர்.

அப்படி மணம் வரக்காரணம் கடலில் வீசப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் மீது நுண்ணுயிர்கள் சூழ்ந்து, அவற்றின் மீது, 'பிளஸ்டிஸ்பியர்' எனும் ஒரு அடுக்காகப் படர்வதுதான் என்கிறார் எரிக்.

இந்த நுண்ணுயிர்கள் வெளியிடும் இரசாயனப் பொருள்கள் கடல்வாழ் உயிர்களின் உணவைப் போன்ற சுவை மற்றும் மணத்தைத் தருகின்றன. பிளாஸ்டிக்கில் இருந்து வெளியாகும் டைமெத்தைல் சல்ஃபைடு எனும் இராசயனப் பொருள் கடல்வாழ் உயிர்கள் மற்றும் மீன்களைக் கவர வல்லன.

தங்கள் உணவின் மணத்தைக் கொண்டு கண்டறியும் கடல்வாழ் பறவைகளுக்கு வேண்டுமானால் இந்தக் கூற்று பொருந்திப் போகலாம். ஆனால், திமிங்கலங்கள் பிளாஸ்டிக் பொருள்களை உட்கொள்வது ஏன்?

அவை நீரை உட்கொள்ளும்போது தவறுதலாக பிளாஸ்டிக் பொருள்களையும் விழுங்கி விடுகின்றன.

### கடல்களில் அதிகரிக்கும் பிளாஸ்டிக்

2015இல் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின்படி, ஆண்டொன்றுக்கு கடலில் மட்டும் 80 லட்சம் தொன் பிளாஸ்டிக் கழிவுகள் சேர்கின்றன.

கடலுக்குள் தேங்கியிருக்கும் நீர் மட்டுமல்லாது நீரோட்டமும் இருக்கும். அவை 'பெருங்கடல் நீரோட்டம்' (ocean current) எனப்படும்.

இந்த நீரோட்டங்களுக்குள் சென்று சேரும் பிளாஸ்டிக் கழிவுகள் நுண்



ணிய பிளாஸ்டிக் துகள்களாக நுணுங்கிவிடும். அந்தத் துகள்கள் கடைசியில் கடல்வாழ் உயிர்களால் உட்கொள்ளப்படுகின்றன.

கடலின் மேல் பரப்பில் மட்டுமல்லாது, அடியாழம் வரை பிளாஸ்டிக் கழிவுகள் உள்ளன

ஆனால், ராஸ்கில்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிறிஸ்டியன் சைபர்க் கடலில் சேரும் பிளாஸ்டிக்கின் அளவு அதைவிடவும் பன்மடங்கு அதிகமாக இருக்கும் என்கிறார்.

80 லட்சம் தொன் என்பது குறைவாக இருக்க இரு காரணங்கள். முதலாவது, கடலில் மேற்பரப்பில் இருக்கும் பிளாஸ்டிக் கணக்கீட்டில் 0.3 மில்லி மீற்றர் அளவைவிட சிறியதாக இருக்கும் கழிவுகளைச் சேர்ப்பதில்லை.

இரண்டாவது, மேற்பரப்பில் இருக்கும் கழிவுகளை மட்டுமே வைத்து முழு அளவையும் சொல்ல முடியாது. காரணம், மேலே மிதக்கும் பிளாஸ்டிக் கழிவுகள் கடலில் இருக்கும் ஒட்டுமொத்த பிளாஸ்டிக்கில் ஒரு மிகச்சிறிய பங்கு மட்டுமே, என்று அவர் வாதிடுகிறார்.

> திமிங்கிலங்கள், பறவைகள் ஆகியவற்றில் பிளாஸ்டிக் கழிவுகள் ஏற்படுத்தியுள்ள தாக்கம் ஓரளவு தெரியும். தொண்டையில் பிளாஸ்டிக் சிக்கி, அவற்றின் உணவுப் பாதையை கிழித்ததாலோ அல்லது அடைத்ததாலோ அவை உயிரிழக்கின்றன,
> - என்கிறார் சைபர்க்.

கடலில் சேரும் பிளாஸ்டிக் கழிவுகளை கட்டுப்படுத்தாவிட்டால், 2025இல் அதன் அளவு 1.75 கோடி தொன்னாக அதிகரிக்கும் என்று 2015 மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அறிக்கை எச்சரிக்கிறது.

### தீர்வுக்கு வழி என்ன?

பிளாஸ்டிக்குகள் தொடர்ந்து கடல்வாழ் உயிர்களால் உட்கொள்ளப்படும் சமயத்தில், அவற்றுக்கான பாதுகாப்பான மாற்றை பெரும் அளவில் உற்பத்திக்கு ஏற்ற வகையில் ஏன் அறிவியல் தொழில்நுட்ப உலகம் உருவாக்கவில்லை என்ற கேள்வியும் எழுகிறது.

பிளாஸ்டிக் கழிவு ஆபத்தை உண்டாக்காத கழிவு என்று வகைப்படுத்தப் பட்டுள்ளதற்கு ஆய்வாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்

கடல் சூழலியல் குறித்து பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டுள்ள ஆய்வாளர் மார்க் பிரவுன் பி.பி.ஸியுடனான முந்தைய நேர்காணல் ஒன்றில் இவ்வாறு கூறியிருந்தார்.



பிளாஸ்டிக் பொருள்களை கடல்வாழ் உயிர்கள் உண்ணக் காரணமான அம்சங்கள் என்ன என்பதை ஆராய்ந்து, பிளாஸ்டிக் உற்பத்தியின்போது அவற்றைத் தவிர்க்க பொறியாளர்களும் சூழலியலாளர்களும் இணைந்து செயல்பட வேண்டும்.

பிளாஸ்டிக் பொருள்கள் கடல்வாழ் உயிர்களுக்கு உண்டாக்கியுள்ள பாதிப்பின் அளவு இன்னும் முழுமையாகத் தெரிய வில்லை.

திமிங்கிலங்கள், பறவைகள் ஆகியவற் றில் பிளாஸ்டிக் கழிவுகள் ஏற்படுத்தி யுள்ள தாக்கம் ஓரளவு தெரியும். தொண்டையில் பிளாஸ்டிக் சிக்கி, அவற்றின் உணவுப் பாதையை கிழித்ததாலோ அல்லது அடைத்ததாலோ அவை உயிரிழக்கின்றன, என்கிறார் சைபர்க்.

கடல் பறவைகள், ஆமைகள் என பல கடல் உயிர்களும் பிளாஸ்டிக்கை உண்பதால் மரணிக்கின்றன

பி.பி.ஸியின் புளூ பிளானட் - 2 தொடருக்கான படப்பிடிப்பின்போது தெற்கு அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள ஒரு தீவில், ஆல்பட்ராஸ் பறவையின் (அண்டரண்டப் பறவை) குஞ்சுகளின் உணவுப் பாதையில் சிறு பிளாஸ்டிக் துண்டுகள் சிக்கிக்கொண்டிருந்தமையைப் படக்குழுவினர் கண்டறிந்தனர்.

அதை உணவு என நினைத்து, தாய் அல்லது தந்தை பறவை அக்குஞ்சுகளுக்கு ஊட்டியிருக்கலாம், என்று அந்நிகழ்ச்சியின் தயாரிப்பாளர் ஜேம்ஸ் ஹனிபார்ன் கூறியிருந்தார். அவற்றில் ஒரு குஞ்சு பிளாஸ்டிக், வயிற்றைக் கிழித்ததால் உயிரிழந்தது.


### பிளாஸ்டிக் கடலில் கலப்பதை தடுப்பது எப்படி?

பசிஃபிக் பெருங்கடலைசுத்தப்படுத்த, 'ஓன் கிளீன் அப்' எனும் பெரு முயற்சி ஒன்று செப்டம்பர் 8 அன்று தொடங்கப் பட்டது.

இதன் மூலம் மாதம் 500 தொன் பிளாஸ்டிக் கழிவுகள் கடலில் இருந்து அகற்றப்படும். 2040இல் கடலில் சேரும் கழிவுகளை 90% குறைப்பதே இதன் இலக்கு.

பிளாஸ்டிக் கடலில் சேரும் கடலோரப் பகுதிகளை இலக்கு வைத்து செயல்பட்டால் இந்த முயற்சி பலனளிக்கும் என்கிறார் சைபர்க். ஆனால், இறுதித் தீர்வு என்பது கடலில் பிளாஸ்டிக் கழிவுகளை வீசாமல் இருப்பதுதான்.

பசிஃபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், கரீபியக் கடல், மத்தியதரைக் கடல் உள்ளிட்ட பல்வேறு கடல் பரப்புகளில் பயணித்து, சுமார் 60 பிளாஸ்டிக்கழிவுகளைசேகரிக்கும் பயணங்களில் பங்கேற்றுள்ளார் எரிக் ஜெட்லர்.



இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு என்று எதுவும் இல்லை என்று கூறுகிறார் அவர்.

மனிதர்களின் செயல்பாடுகள், அரசாங்க விதிமுறைகள், தொழில்துறையினரின் பங்கெடுப்பு ஆகியவை மூலமே பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முடியும் என்கிறார் அவர்.



# சூழ்நிலையால் தடுமாறாதே!

சிறுவன் நரேந்திரன் கொல்கத்தாவைச் சேர்ந்தவன். அப்போது அவனுக்கு பத்து வயது நடந்துகொண்டிருந்தது. அவன் தன் வீட்டில் நண்பர்களுடன் சேர்ந்து, ஒரு நாடகக் குழுவை அமைத்தான். அதில் அவனும் அவனது நண்பர்களும் பல நாடகங்கள் நடத்தினார்கள். சிறிது காலத்திற்குப் பிறகு நரேந்திரன், தன் வீட்டு முற்றத்தில் தன் நண்பர்களுடன் சேர்ந்து ஓர் உடற்பயிற்சிக் குழுவை அமைத்தான். பின்னர் நரேந்திரனும் அவனது நண்பர்களும், முறைப்படி உடற்பயிற்சிகளைக் கற்றுக் கொள்ள விரும்பினார்கள். எனவே அவர்கள், நவகோபால் மித்ரா என்பவர் நடத்தி வந்த உடற்பயிற்சி நிலையத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்தார்கள். அங்கு நரேந்திரன் கபடி, சிலம்பம், மல்யுத்தம், நீச்சல் பயிற்சி, படகு செலுத்துதல், கத்திச்சண்டை, கிரிக்கெட், லத்திச்சண்டை ஆகியவற்றைப் பெரிதும் ஆர்வத்துடன் கற்றுக்கொண்டான். அவனுடைய ஆர்வத்தை நவகோபால் மித்ரா கவனித்தார். எனவே அவர், தன்னுடைய உடற்பயிற்சி நிலையத்தின் நிர்வாகப் பொறுப்பை நரேந்திரனிடமே ஒப்படைத்தார்.

ட்ரபீஸ் என்பது ஒரு வகையான உடற்பயிற்சியாகும். கூரையில் இரண்டு கயிறுகளுக்கு இடையில் கனமான மரக்கட்டையைத் தொங்கவிட்டிருப்பார்கள். அந்த மரக்கட்டையைப் பிடித்துக் கொண்டு உடற்பயிற்சி செய்வதுதான் ட்ரபீஸ் உடற் பயிற்சியாகும். ஒரு நாள் நரேந்திரனும் அவனது நண்பர்களும் சேர்ந்து, ட்ரபீஸ் மரக்கட்டையைக் கூரையில் பொறுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். அதைப் பார்ப்பதற்கு அங்கு மக்கள் கூட்டம் கூடி விட்டது. அந்தக் கூட்டத்தில் ஆங்கிலேய மாலுமி ஒருவரும் இருந்தார். அவரை நரேந்திரன் உதவிக்கு அழைத்தான்.

ஆங்கிலேய மாலுமியும் நரேந்திரனும் அவனது நண்பர்களும் ஒன்றுசேர்ந்து, கனமான மரக்கட்டையைக் கூரையில் பொருத்துவதற்கு முயற்சி செய்தார்கள். ஒரு தருணத்தில் மரக்கட்டை நழுவி, நேராக மாலுமியின் தலையில் விழுந்தது. மாலுமி சுயநினைவு இழந்து விழுந்து விட்டார். அவர் தலையில் பலமாக அடிபட்டு இரத்தம் கசிந்தது. அதைப் பார்த்து, மாலுமி இறந்துவிட்டார்! என்று நினைத்து, அங்கு கூடியிருந்த மக்கள் கூட்டம் வேகமாகக் கலைந்து போயிற்று.

நரேந்திரனும் அவனுடைய ஒன்றிரண்டு நண்பர்களையும் தவிர, மற்ற நண்பர்கள் அங்கிருந்து நழுவிவிட்டார்கள். இந்தக் குழப்ப நிலையில் நரேந்திரனின் மனம் ஒரு சிறிதும் தடுமாறவில்லை. அவன் தன் வேட்டியைக் கிழித்து, ஆங்கிலேய மாலுமியின் தலையில் அடிபட்ட இடத்தில் கட்டினான்; மாலுமியின் முகத்தில் சிறிது தண்ணீர் தெளித்து, மெல்ல விசிறி தேவையான முதலுதவி சிகிச்சை செய்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு மாலுமிக்கு சுயநினைவு திரும்பியது. உடனே நரேந்திரனும் அவனது நண்பர்களும், கைத்தாங்கலாக மாலுமியை அருகில் இருந்த ஒரு பள்ளிக்கூடத்திற்கு அழைத்துச் சென்று படுக்க வைத்தார்கள். அங்கு நரேந்திரன் டாக்டர் ஒருவரை அழைத்து வந்து, மாலுமிக்கு உரிய சிகிச்சை அளித்தான்.

மாலுமிக்கு அங்கு ஒரு வாரம் சிகிச்சை நடந்தது. மாலுமி உடல் நலம் தேறியதும், நரேந்திரனுக்கும் அவனது நண்பர்களுக்கும் நன்றி தெரிவித்துவிட்டு அங்கிருந்து சென்றார். அவர் புறப்பட்ட போது நரேந்திரன், தன் நண்பர்களிடம் திரட்டிய பணத்துடன் தன் பங்கையும் சேர்த்து மாலுமிக்குச் சிறிது பணம் தந்தான். இந்த நரேந்திரன் வளர்ந்து பெரியவனாகி, சுவாமி விவேகானந்தர் என்ற புகழ்பெற்ற துறவியானார். அவர் உலகின் பல நாடுகளுக்கும் சென்று, இந்தியாவின் பெருமையை நிலைநிறுத்தினார்.

இந்த உலகம் கோழைகளுக் காக ஏற்பட்டதல்ல; இங்கிருந்து நீ தப்பியோட முயற்சி செய்யாதே. இந்த உலகம் மிகப் பெரிய ஓர் உடற்பயிற்சிக் கூடம். இங்கு நாம் நம்மை வலிமையுடையவர்களாக்கிக் கொள்வதற்காக வந்திருக்கிறோம்.

- சுவாமி விவேகானந்தர்.



# பிள்ளைகளுக்கான 5 நிமிட பயிற்சியும்... அற்புத மாற்றங்களும்...!

பிள்ளைகள் சிறப்பான திறன் மேம்பாட்டை வளர்க்க தினசரி பயிற்சிக்கு ஒவ்வொரு நாளும் சில நிமிடங்கள் ஒதுக்கினாலே போதும். தன்னம்பிக்கை வளர்த்து தங்களை உயர்த்தும்.

பள்ளிப் பருவத்தில் இருந்தே ஒரு ஒழுங்கு முறையுடன் செயல்படுபவர்களுக்கு வெற்றிகள் குவியும். அவர்கள் சிறந்த மாணவராகவும், எதிர்கால தலைவராகவும் உச்சம் தொடுவது நிச்சயம். அப்படி சிறப்பான திறன் மேம்பாட்டை வளர்க்கும், தினசரி பயிற்சிக்கு ஒவ்வொரு நாளும் சில நிமிடங்கள் ஒதுக்கினாலே போதும். தன்னம்பிக்கை வளர்த்து தங்களை உயர்த்தும் அந்தப் பயிற்சிகளை அறிவோமா...

சுவாசப்பயிற்சி: நமது சுவாசம் உயிர்வாழ மட்டுமல்ல உற்சாகத்திற்கும் அவசியமாகும். தூய்மையான காற்றும், அதிகமான ஒக்சிஜனும், மூளையை சுறுசுறுப்பாக்கும் மூச்சுப் பயிற்சி மூலம் காசு கொடுக்காமலே இந்த உற்சாக டானிக்கை உடலில் ஏற்றிக் கொள்ளலாம். தினசரி காலையில் எழுந்ததும் 5 நிமிடங்களுக்கு மூச்சுப் பயிற்சி செய்வதை வழக்கமாக்கினால் முன்னேற்றம் தேடி வரும் என்பது முன்னோர் கூறிய அமுதவாக்காகும்.

பிரச்சினையான ஒரு சூழலில், சில வினாடிகள் அமைதியாக மூச்சுப் பயிற்சி மேற்கொண்டால் மனம் தெளிவடைவதை உடனே உணரலாம். மூச்சுப் பயிற்சி செய்வதற்கு தேர்ந்த வழிமுறைகள் இருக்கின்றன. இருந்தாலும் சாதாரணமாக மூச்சை இழுத்துவிடும் முறையிலேயே பயிற்சி செய்யலாம். நீளமாக மூச்சை இழுத்து நிதானமாக வெளியிடுவதுதான் மூச்சுப் பயிற்சியின் முக்கிய அம்சம். முடிந்தால் ஒரு நாசித் துவாரத்தை மூடிக் கொண்டு மூச்சை நீளமாக இழுத்து நிதானமாக வெளியிட்டு பழகுங்கள். அதேபோல சில முறை மறு நாசித் துவாரத்தின் வழியே பயிற்சி செய்யலாம். அமைதியான சூழலில், காற்றோட்டமான இடத்தில் இதைச் செய்தால் பலன் பெருகும். குறைந்தபட்சம் 5 நிமிடம் முதல் அதிகபட்சம் 20 நிமிடம் செய்வதால் சிறந்த முன்னேற்றம் கிடைப்பதை உடலும், மனமும் உணரத் தொடங்கும்.

பலத்தை அதிகரியுங்கள் : உடலும், மனமும் பலமாக இருந்தால் நினைத்ததை சாதிக்கலாம். கடும் பயிற்சியால் உடலை பலப்படுத்துவதைவிட, திட சிந்தனையால் மனதை பலப்படுத்தி காரியங்களைக் கைகூட வைக்க முடியும். நேர்மறையான எண்ணங்களை வளர்த்து, என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கையால் மனம் உறுதி பெறும். எண்ணியன எல்லாம் ஈடேறத் தொடங்கும். முடிந்தால் உடல் வலுவையும் அதிகரித்து பலவானாகவும் திகழுங்கள்.

தினசரி மதிப்பீடு: எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கையை கைவிடாதவர்கள், மற்றவர்களிடம் இருந்து வித்தியாசமாக சிந்தித்து செயல்பட்டவர்களை வெற்றி என்றும் தழுவியிருக்கிறது. நீங்கள் நம்பிக்கையுடன் இருங்கள், மற்றவர்களுடன் இணக்கமாக செயல்படுங்கள். மற்றவர்களைவிட்டு மாறுபட்டு செயல்படுங்கள். ஒவ்வொரு நாளும் உங்கள் பணிகளை திறம்பட செய்தால் வெற்றி உங்கள் வசமாவதை உணர்வீர்கள். தினசரி உங்களுக்கு நீங்களாவே சொல்லுங்கள், நான் உயர்கிறேன், வெற்றி பெறுகிறேன் என்று. நிச்சயம் ஒரு நாள் வெற்றிச் சிகரத்தின் மீது நிற்பீர்கள்!

# அழகான பூக்கள் பற்றிய ஒரு பார்வை!



**1. அசுர லில்லி** (gimea lilly)

நெருப்பு லில்லி, அசுரர் லில்லி, பெரிய ஈட்டிச்செடி என்றெல்லாம் குறிப்பிடப்படும் என்றால் Gimea lilly யின் தாவரவியல் பெயர் doryanthes excelsa என்பதாம். dory anthes என்றால் கிரேக்க மொழியில் ஈட்டிப்பூ என்றும் என்றால் excelsa என்றால் லத்தீன் மொழியில் அபூர்வமானது என்றும் பொருளாம்.

அண்ணாந்து பார்க்கவைக்கும் அபூர்வ செடிதான் இந்த அசுர லில்லி. 1முதல் 2.5 மீ வரை நீளமுள்ள கத்தி போன்ற இலைகளுக்கு மத்தியில் கிட்டத்தட்ட 3 மீ முதல் 8 .மீ. உயரம் வரை வளரக் கூடிய தண்டின் உச்சியில் கொத்தாய் ரத்தசிவப்பில் பூப்பவை என்றால் அபூர்வமில்லையா ? 70செ.மீ விட்டமுள்ள வட்டப் பூங்கொத்தில் சுமார் 150 பூக்கள் இருக்கலாம். அலங்காரப் பூங்கொத்துகளில் பயன்படுத்தப்படும் மலர்களிலேயே மிகப்பெரியது இந்த அசுர லில்லிதான் என்பது இதன் மற்றொரு சிறப்பு.

பூக்கும் காலம் வருவதற்கு ஐந்து முதல் இருபது வருடங்கள் ஆகும். இதன் பூக்களிலிருந்து நறுமணத்தைலம் தயாரிக்கப்படுகிறது: பறவைகள் இப்பூவின் தேனையும் பூந்தாதையும் விரும்பியுண்கின்றன.

**2. ப்ரோமெலியட் பூக்கள்** (bromalied flower)



பிராமலியாட் இனத்தில் அறியப்பட்ட வகைசுமார் 2700குமேல் இருக்கின்றன. நமக்கு நன்கறியப்பட்ட ப்ரோமெலியாட் வகை அன்னாசி. அமெரிக்கா, ஆபிரிக்கா போன்றவற்றின் வெப்ப மண்டல பிரதேசங்களை தாயகமாகக் கொண்டவை . இவை அழகுக்காக அனைவராலும் விரும்பி வளர்க்கப்படுகின்றன.

ப்ரோமெலியாட் பூக்களுக்கு பூக்கும் பருவம் என்று எதுவும் கிடையாது. நல்ல வளமான சூழல் இருந்தால் வருடத்தில் எந்த சமயத்திலும் பூக்கும்.

பூக்களும் மாதக்கணக்கில் வாடாமல் இருக்கும். சில ப்ரோமெலியாட் செடிகள் ஒருமுறை பூத்தபின் மடிந்துவிடும். அரிதான சில ப்ரோமெலியாட் வகை பூக்கும் பருவத்தை எட்டுவதற்கே எண்பது வருடங்கள் காத்திருக்கவேண்டுமாம்.



**3. ஐரிஸ் பூக்கள்** (iris flower )

ஐரிஸ் என்றால் கிரேக்க மொழியில் வானவில் தேவதை என்று பொருளாம். வானவில் போல் அழகு மலர்களால் வசீகரிக்கும் இத்தாவரத்துக்கும் ஐரிஸ் என்ற பெயர் பொருத்தம் தானே. இவை லில்லி பூக்களைப் போலவே கிழங்கிலிருந்து வளர்ந்து பூக்கின்றன.

இப்பூக்களிலிருந்து நறுமணத்தைலம் மற்றும் மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. கனடா நாட்டின் க்யூபெக் மாநிலக்கொடியில் ஐரிஸ் மலர் இடம்பெற்றுள்ளது.

குரோஷியா நாட்டின் தேசிய மலரும் இதுவே. 25வது திருமணக் கொண்டாட்டத்தின் அடையாள மலர் என்ற சிறப்பும் உடையது இவற்றுள் சுமார் 300 வகைகள் காணப்படுகின்றன.

# யாழ். மாவட்ட உற்பத்திக்கென புதிய ரக திராட்சை அறிமுகம்!

## விவசாய அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணங்களில் உற்பத்தி செய்யக் கூடிய ஏற்றுமதிக்கான தகுதியான தரத்தில் உயர்ந்த திராட்சையை அறிமுகப்படுத்துவதற்கு ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர விவசாயதிணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இலங்கையில் தற்பொழுது திராட்சையை உற்பத்தி செய்யும் பிரதேசங்களில் ஆகக்கூடிய அறுவடை யாழ். மாவட்டங்களில் கிடைக்கப்பெறுகிறது. இருப்பினும் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் திராட்சையில் பெரும்தொகைவைன் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

இதே போன்று இந்த திராட்சையைப் பயன்படுத்துவதில் பொதுமக்கள் மத்தியில் ஆககூடுதலான கேள்வி இல்லாததனால், சிறந்த தரத்திலான ஏற்றுமதிக்கு பொருத்தமான திராட்சையை அறிமுகப்படுத்துமாறு யாழ் உற்பத்தியாளர்கள் விவசாய அமைச்சிடம் கோரிக்கை முன் வைத்துள்ளனர்.

இது தொடர்பில் விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் ராமநாதன் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதன் பெறுபேறாக விவசாய திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கிய அமைச்சர் மஹிந்த அமரவீர திராட்சை தொடர்பில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் தொடர்பான கருத்துக்களையும் கேட்டறிந்தார்.

விவசாய திணைக்களம் தற்பொழுது திராட்சை தொடர்பில் புதிய ஆய்வுகளை மேற்கொள் கின்றது. அத்தோடு எமது நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய விசேட திராட்சையை அறிமுகப்படுத்துவதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ள து என்றும் தெரிவிக்கப்படுள்ளது.

இந்த ஆய்வு பணிகளை கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய ஆய்வு நிறுவனத்தின் மூலம் மேற்கொள்வதற்கு காரணம் திராட்சை உற்பத்திக்கு பொருத்தமான மண்வளம் மற்றும் காலநிலை அந்தப் பிரதேசத்தில் நிலவுவதாகும்.

இதற்கமைவாக மிக விரைவாக யாழ். பிரதேசத்தில் உற்பத்தி செய்யக்கூடிய திராட்சையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு விவசாய அமைச்சர் விவசாயதிணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

# போதைப்பொருள் தகவல்களை அறிவிக்க புதிய தகவல் கூடம்!

ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருள்கள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்காக பொலிஸ் தலைமையகத்தில் விசேட நடவடிக்கைக் கூடம் அமைக்கப்படும்.

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் நேரடி மேற்பார்வையின் கீழ் விசேட நடவடிக்கைக் கூடம் இயங்கவுள்ளது. இது நேற்றுமுன்தினம் மாலை ஆரம்பித்து வைக்கப் பட்டது. தொடர்ச்சியாக 24 மணி நேரமும் இயங்குவது இதன் சிறப்பம்சமாகும்.

பொதுமக்கள் தொலைபேசி மூலம் விசேட நடவடிக்கைக் கூடத்தைத் தொடர்புகொண்டு பாது காப்பான முறையில் தகவல் அறிவிக்கலாம். அழைக்க வேண்டிய இலக்கங்கள் 0113 024 803, 0113 024 815, 0113 024 820, 0113 024 848, 0113 024 850 ஆகியவையாகும்.

பக்ஸ் மூலம் தகவல் அறிவிக்க 0112 472 757 என்ற இலக்கத்தை தொடர்பு கொள்ள வேண்டும்.

போதைப் பொருள் கட்டுப்பாட்டு முயற்சிகளுக்காக தம்முடன் கைகோர்த்துக்கொள்ளுமாறு பொலிஸ் திணைக்களம் பொதுமக்களைக் கேட்டுள்ளது.

# க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான செயல்முறைப் பரீட்சைகள் ஆரம்பம்!




க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான செயன்முறைப் பரீட்சைகள் நேற்று ஆரம்பமாகின. இந்தப் பரீட்சைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித் தெரிவித்தார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கான செயல்முறைப் பரீட்சைகளை அடுத்த மாதம் 3 ஆம் வாரத்தில் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

சாதாரண தரப் பரீட்சை நடைபெறுவதற்கு முன்னர் அதற்கான செயல் முறைப் பரீட்சைகள் நடைபெறும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

சாதாரணப்தரப்பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகள் அதற்குப் பின்னரான செயல் முறைப் பரீட்சையில் ஆர்வம் காட்டுவதில்லை. அதன் காரணமாக செயல்முறைப் பரீட்சைகளை முன்கூட்டியே நடத்துவதென தீர்மானித்துள்ளோம் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

# தேசிய கரையோரக் கடல் வளங்களை பேணும் வாரம் மன்னாரில் ஆரம்பம்!




தேசிய கரையோரக் கடல் வளங்களைப் பேணும் வாரம் மன்னாரில் நேற்று ஆரம்பமானது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தொலை நோக்கிற்கு அமைவாக இது முனனெடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மன்னார் கீரி கடற்கரை பகுதியில் மன்னார் மாவட்டச் செயலாளர் சி.ஏ. மோகன்ராஸ் தலைமையில் இதுதொடர்பான நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், கிராம அலவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

# பேரினவாத கட்சிகளுக்கு ஆதரவளிப்பது கூட்டமைப்பை பலமிழக்கச் செய்து விடும்

## கவீந்திரன் கோடீஸ்வரன் எம்.பி தெரிவிப்பு




அம்பாறை, செப்.19

பேரினவாத கட்சிகளுக்கு தமிழ் மக்கள் ஆதரவு வழங்குவதானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலமிழக்கச் செய்யும் செயற்பாடாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

52 லட்சம் ரூபா நிதியொதுக்கீட்டின் கீழ் திருக்கோவில், விநாயகபுரம் மின்னொளி மைதானத்திற்கான அடிக்கல் நடும்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை அரசுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபை உட்பட உலக நாடுகள் கேள்வி கேட்கின்ற நிலைமையை உருவாக்கியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்பதனை தமிழ் மக்கள் ஒருபோதும் மறந்து விடக்கூடாது.

நாட்டில் உள்ள பேரினவாத கட்சிகள் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைக்காக குரல் கொடுக்கப் போவதில்லை. இவ்வாறானவர்களுக்கு தமிழ் மக்கள் ஆதரவு வழங்குவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலமிழக்க செய்யும் செயற்பாடாகும்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழ் மக்களுக்கான உரிமையைப் பெற்றுக் கொடுக்க போராடும் அதே வேளை, அபிவிருத்தியையும் செய்து கொண்டு எதிர்ப்பு அரசியலலை விட்டு சாணக்கிய அரசியலை செய்து வருகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பஸ் கட்டண விலைச்சூத்திரம் குறித்து

# போக்குவரத்து அமைச்சுடன் இன்று விசேட கலந்துரையாடல்

கொழும்பு, செப்.19

பஸ் கட்டணத்திற்கான விலை சூத்திரமொன்றை தயாரிப்பது தொடர்பில் இன்று போக்குவரத்து அமைச்சுடன் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளவுள்ளோம் என தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –


எரிபொருள் விலைசூத்திரத்திற்கு ஏற்ப கட்டண சூத்தரம் இல்லாமை காரணமாக சேவைகளில் பெரும் பிரச்சினைகளும் தோற்றம் பெற்றுள்ளன.

இதனால், பயணிகளும் அசௌகரியங்களை எதிர்க்கொள்கின்றனர். இந்தப் பிரச்சினைகளை சீர் செய்ய வேண்டுமானால் எரிப்பொருள் விலை சூத்திர மாற்றத்துக்கு ஏற்ற வகையிலான கட்டண சூத்திரமொன்றும் அவசியமாகக் காணப்படுகின்றது.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் வகையில் ஜனாதிபதிக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டும் தீர்வுகள் எதுவும் கிடைக்க வில்லை. ஆகவே இன்று இது தொடர்பில் போக்குவாரத்து அமைச்சுடன் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# உலகப் புகழ்பெற்ற 'டைம்' வார இதழை வாங்கிய செல்வந்தர்!




நியூயோர்க், செப்.19

உலகம் முழுவதும் பிரசித்தி பெற்ற 'டைம்' வார இதழை 190 மில்லியன் அமெரிக்க டொலருக்கு சேல்ஸ்ஃபோர்ஸ் நிறுவனத்தின் நிறுவுநர் மார்க் பேனியாப் வாங்கியுள்ளார்.

உலகம் முழுவதும் பிரசித்தி பெற்ற டைம் வார இதழ் தொடங்கப்பட்டு 95 ஆண்டுகளை எட்டியுள்ள நிலையில், அந்த நிறுவனத்தை சேல்ஸ்போர்ஸ் நிறுவனத்தின் நிறுவுநர்களில் ஒருவரான மார்க் பேனியாபும் அவரது மனைவியும் இணைந்து190 மில்லியன் டொலர்களுக்கு மெர்டித்கார்ப்பரேசன் நிறுவனத்திடம் இருந்து வாங்கியுள்ளனர்.

டைம் பத்திரிகையை வாங்கியதற்கும் சேல்ஸ்போர் நிறுவனத்திற்கு தொடர்பு இல்லை என்றும், பேனியாபும் அவரது மனைவியும் தனிநபர்கள் என்ற முறையிலேயே டைம் இதழை வாங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகையை வாங்கினாலும், டைம் பத்திரிக்கையின் அன்றாட நடவடிக்கைகளிலோ இதழியல் சார்ந்த முடிவுகளிலோ பேனியாப் தலையிட மாட்டார் என்றும், அதை தற்போதுள்ள நிர்வாகத் தலைமைக் குழுவே மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொருளாதாரத் தடைகள் விதித்து ஈரானை அசைத்துவிட முடியாது

ஈரான் மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் பயனற்றவை மற்றும் தவறானவை என்று ரஷ்யா விமர்சித்துள்ளது.

இதுகுறித்து ரஷ்யாவின் ஆற்றல் வளத்துறை அமைச்சர் அலெக்சாண்டர் நோவாக் கூறும்போது –

ஈரான் கச்சா எண்ணெய் வர்த்தகத்தில் நிலையான தன்மையைக் கொண்டுள்ளது. அவர்களை தொடர்ந்து சந்தையில் செயல்படவிடுவது நல்லது. ஈரான் மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் தவறானவை மற்றும் எந்தவித பலனும் இல்லாதவை. ஆனால் நாம் இதுகுறித்து கருத்து மட்டுமே கூற முடியும் என்று தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டில், அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஆட்சிக் காலத்தில் ஈரானுக்கும் அமெ


அமெரிக்கா மீது ரஷ்யா சாடல்

ரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட 6 வல்லரசு நாடுகளுக்கும் இடையே அணு சக்தி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தில், அணு சக்தியை ஆக்கபூர்வ பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்துவோம் என்று ஈரான் உறுதியளித்தது. இதை ஏற்று அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட பல்வேறு பொருளாதாரத்தடைகளும்நீக்கப்பட்டன.

அமெரிக்கஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றபிறகு, ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை முறிப்பேன் என்றும் ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தம் பைத்தியக்காரத்தனமானது என்றும் கடுமையாக விமர்சித்து வந்தார்.

இந்த நிலையில் ஈரானுடனான ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகியது.

ஈரான் ஒரு நாளைக்கு 24 லட்சம் பரல் கச்சா எண்ணெய்யை உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. இந்த நிலையில் ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா தொடர்ந்து விதித்து வருகிறது.

மேலும், ஈரானிடமிருந்து கச்சா எண்ணெய்யை இந்தியா உள்ளிட்ட பிற நர்டுகள் வாங்குவதைத் தடுக்க ட்ரம்ப் நடவடிக்கை எடுத்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வியட்நாமில் போதை மருந்து உட்கொண்ட 7 பேர் உயிரிழப்பு; கோமாவில் 5 பேர்!

ஹனோய், செப்.19

வியட்நாமில் இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அதிகளவில் போதை மருந்து உட்கொண்ட 7 பேர் பலியான நிலையில், மேலும் 5 பேர் கோமாவில் உள்ளனர்.

வியட்நாம் தலைநகர் ஹனோயில் தொடர் இசை நிகழ்ச்சி நடந்து வருகிறது. நேற்று முன்தினம் , இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பலர் திடீரென மயங்கி விழ அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அதிகளவில் போதை மருந்து உட்கொண்டதன் காரணமாக அவர்கள் மயங்கினர் எனக் கூறப்பட்டது.

சிறிது நேரத்தில் சிகிச்சை பயனின்றி 7 பேர் உயிரிழந்தனர். 5 பேர் சுயநினைவு இன்றி கோமாவில் உள்ளனர். இதனை அடுத்து, இசை நிகழ்ச்சி நிறுத்தப்பட்டுள்ளது. மேலும், இது தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# ஆப்கனில் தொடரும் பயங்கரவாதம்; தலிபான் தாக்குதலில் 10 படையினர் பலி!

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பு படையினரின் முகாம்களில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 10 வீரர்கள் மரணம் அடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை பட்கிஸ் மாகாணத்தில் பொலிஸார் மற்றும் ராணுவத்தினர் தங்கி இருக்கும் முகாம்கள் மீது பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். சற்றும் எதிர்பாராத தாக்குதலை சமாளித்து எதிர்த்தாக்குதல் நடத்திய பொலிஸார் 22 பயங்கரவாதிகளைச் சுட்டு வீழ்த்தினர். மேலும், 16 பயங்கரவாதிகள் காயங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த துப்பாக்கிச்சண்டையில் 5 பாதுகாப்பு படை அதிகாரிகள் மரணம் அடைந்த னர் என மாகாண செய் தித்தொடர்பாளர் ஜம்ஷித் சஹாபி தெரிவித்துள்ளார். இதேபோல், வடக்கு பக்லான் மாகாணத்தில் உள்ள பாதுகாப்பு படையினர் முகாம்களில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 3 ராணுவ வீரர்கள் உட்பட 5 பேர் உயிரிழந்துள்ளனர். அதே வேளையில் பாதுகாப்பு படையினரின் பதில் தாக்குதலில் 20 இற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டு இருக்கலாம் என கூறப்படுகிறது.

# பூட்டான் நாடாளுமன்ற தேர்தலில் பிரதமரின் கட்சி படுதோல்வி!

## எதிர்க்கட்சி வெற்றிபெற்றது

பூட்டான் நாடாளுமன்ற தேர்தலில் நேற்று முன்தினம் வாக்கு எண்ணிக்கை நடந்தது. முதல் கட்ட தேர்தலில்பிரதமரின் ஆளும் கட்சி படுதோல்வி அடைந்தது. எதிர்க்கட்சி வெற்றிபெற்றுள்ளது.

இந்தியாவுக்கு அருகே இமய மலை சாரலில் உள்ள நாடு பூட்டான். இங்கு நாடாளுமன்ற தேர்தல் நடந்தது. அதில் பிரதமர் ரெங் தோபே தலைமையிலான ஆளும் மக்கள் ஜனநாயக கட்சி போட்டியிட்டது.

அதை எதிர்த்து டி.என்.டி மற்றும் டி.பி.டி ஆகிய எதிர்க்கட்சிகள் மோதின. அதில் 2 லட்சத்து 91 ஆயிரம் பேர் வாக்களித்தனர். நேற்று முன்தினம் வாக்கு எண்ணிக்கை நடந்தது.

இதில் டி.என்.டி கட்சி 92 ஆயிரத்து 722 வாக்குகள்பெற்று வெற்றிபெற்றது. அதற்கு அடுத்தபடியாக டி.பி.டி கட்சி 2 ஆவது இடம் பிடித்துள்ளது. இக்கட்சி 90 ஆயிரத்து 20 வாக்குகள் பெற்றுள்ளது.

இத்தேர்தலில் பிரதமர் தோபேவின் ஆளும் பி.டி.பி மக்கள் ஜனநாயக கட்சி படுதோல்வி அடைந்து 3 ஆவது இடத்தை பிடித்துள்ளது. பூடான் அரசியல் சட்டப்படி முதல் சுற்று தேர்தலில் முதல் 2 இடங்களை பிடிக்கும் கட்சிகளுக்கு இடையே 2 ஆவது சுற்று தேர்தல் நடைபெறும்.

அதில்வெற்றிபெறும்கட்சியே ஆட்சி அமைக்கும். அதன்படி எதிர்வரும் ஒக்டோபர் 18 ஆம் திகதி நடக்கும் 2 ஆவது சுற்று தேர்தலில் டி.என்.டி. மற்றும் டி.பி.டி கட்சிகள் போட்டியிடுகின்றன. அக்கட்சிகளின் வேட்பாளர்களுக்கு பிரதமர் தோபே வாழ்த்து தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க கடற்கரையில் சுறா தாக்கு: இளைஞர் பலி!



வொஷிங்டன், செப்.19

அமெரிக்காவின் நியூகோம்ப் ஹாலோ கடற்கரையில் கொடூரமாக சுறா தாக்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் மாகாணம், நியூ கோம்ப் ஹாலோ கடற்கரையில் நேற்று முன்தினம் இளைஞர் ஒருவரை கொடூரமான சுறா தாக்கியது. அவரது அலறல் கேட்டு அங்கு இருந்தவர்கள் அவரை மீட்டு முதலுதவி அளித்து, வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றனர். ஆனால் அங்கு அவர் சிகிச்சை பயனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

அவரது பெயர் விவரம் வெளியிடப்படவில்லை. இருப்பினும் குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு விட்டதாக தெரிய வந்துள்ளது. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அடுத்த 24 மணி நேரத்துக்கு நியூகோம்ப் ஹாலோ கடற்கரையில் நீச்சல் வீரர்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை. கடந்த 1936 ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்த மாகாணத்தில் ஒருவர் சுறா தாக்கி உயிரிழந்து இருக்கின்றமை இதுவே முதல் முறை எனத் தகவல்கள் கூறுகின்றன.

இருப்பினும் நியூகோம்ப் ஹாலோ கடற்கரையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 61 வயதான நரம்பியல் மருத்துவ நிபுணர் வில்லியம் லிட்டன் சுறா தாக்குதலுக்கு ஆளானார். கால்களில் படுகாயம் அடைந்த அவர் மருத்துவமனையில் இன்னும் சிகிச்சை பெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் பிறக்கும் ஆப்கானிஸ்தான் அகதிகளின் குழந்தைகளுக்கு குடியுரிமை!'





இஸ்லாமாபாத், செப்.19

பாகிஸ்தானில் பிறக்கும் ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அகதிகளின் குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்கப்படும் என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் அறிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷில் இருந்து பல ஆயிரம் அகதிகள் அண்டை நாடுகளுக்கு இடம் பெயர்கின்றனர். உள்நாட்டு போர் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அவர்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாக குடியேறுகின்றனர்.

அவ்வாறு அகதிகளாக குடியேறிய மக்களுக்கு எந்த நாட்டிலும் குடியுரிமை உட்பட எவ்வித உரிமைகளும் வழங்கப்படுவது இல்லை. இதனால், அவர்கள் அன்றாட வாழ்வுக்கு மிகவும் போராடும் சூழல் இருக்கிறது.

இந்த நிலையை ஒழிக்கும் முயற்சியில்தற்போது பாகிஸ்தான் அரசு களமிறங்கியுள்ளது. பாகிஸ்தானில் பிறக்கும் ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அகதிகளின் குழந்தைகளுக்கு குடியுரிமை மற்றும் பாஸ்போர்ட் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு தொடர்பாக தொலைக்காட்சி ஒன்றில் பேசிய பிரதமர் இம்ரான் கான், அகதிகள் எவ்வித அடையாளங்களும் இல்லாததால் வேலைவாய்ப்புகள் இன்றி அவர்கள் மிகவும் சிரமப் படுகின்றனர். அதனால், நடைபெறும் பல்வேறு குற்றங்களை தடுக்கவும் இந்த நடவடிக்கையை மேற்கொள்கிறோம் என அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் 2.7 மில்லியன் ஆப்கானிஸ்தான் அகதிகள் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிஜி தீவுகளில் கடும் நிலநடுக்கம்

பிஜிதீவுகள்:, செப்.19

பசிபிக் கடல் பகுதியில் அமைந்துள்ள பிஜி தீவுகளில் நேற்று முன்தினம் அதிகாலை 6.2 ரிச்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

பசிபிக் கடல் பகுதியில் அமைந்துள்ள பிஜி தீவுகளில் நேற்று முன்தினம் அதிகாலை 2.41மணிக்கு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

தெற்கு தீவுகளை மையமாகக் கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அப்போது அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த மக்கள் அலறியடித்து தபடி வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

வீதிகளுக்கு ஓட்டம் பிடித்தனர். அங்கு 6.2 ரிச்டரில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. பூமிக்கு அடியில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. கடந்த ஓகஸ்ட் 19 ஆம் திகதி பிஜி தீவுகளில் மிகவும் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. 8.2 ரிச்டரில் பதிவான இந்த நிலநடுக்கம் கடும் பாதிப்புகளை ஏற்படுத்தியது.

பசிபிக் கடலில் நிலநடுக்க பாதிப்பு மிகுந்த நெருப்பு வளையப் பகுதியில் பிஜி தீவு அமைந்துள்ளது. இதனால் அங்கு அடிக்கடி நிலநடுக்கங்களுடன் எரிமலை சீற்றமும் ஏற்படுகிறது.

காலைக்கதிர்
Kalaikkathir



## நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் சம்பந்தமாக முதல்வர் விக்னேஸ்வரன் தரப்பில் பூர்வாங்க ஆட்சேபனை கிளப்பப் பட்டமையை அடுத்து, அது தொடர்பான விசாரணை நேற்று காலை முழு நேரமும் நடைபெற்றது. அந்த விடயத்தைத் தொடர்ந்து விசாரிப்பதற்காக அடுத்த மாதம் 16 ஆம் திகதிக்கு வழக்குத் திகதியிடப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் டெனிஸ்வரனினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நேற்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்கள் ஜனக் டி சில்வா, குமுதினி விக்கிரமசிங்க ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை ஒத்திவைக்குமாறு முதல்வர் விக்னேஸ்வரன் தரப்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன் கோரினார். அந்தக் கோரிக்கை நீதியரசர்களால் நிராகரிக்கப்பட்டு, வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

குற்றம் சுமத்தப்பட்ட முதல்வர் விக்னேஸ்வரன், மாகாண அமைச்சர்கள் சிவநேசன், அனந்தி சசிதரன் ஆகியோருக்கு நீதிமன்ற குற்றப்பத்திரத்தைக் கையளித்து குற்றவாளியா, சுற்றவாளியா என வினவத் தீர்மானிக்கப்பட்டது.

அப்போது முதல்வரின் சட்டத்தரணி கனகேஸ்வரன் இந்த வழக்கை விசாரிப்பதற்கு இந்த நீதிமன்றத்துக்கு நியாதிக்கம் இல்லை என்று அடிப்படையில் தாம் பூர்வாங்க ஆட்சேபனை ஒன்றைக் கிளப்புகின்றார் எனத் தெரிவித்தார்.

அந்த ஆட்சேபனையைப் பரிசீலனைக்கு ஏற்றுக் கொண்ட நீதியரசர்கள், அதன் மீது மூத்த ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன் வாதாடி, சட்ட ஆதாரங்களை முன்வைக்க அனுமதி அளித்தனர்.

உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை எப்படி நடத்துவது என்பது தொடர்பான படிமுறைகள், சட்ட ஏற்பாடுகள், நடைமுறை ஒழுங்கு விதிகள் என்பன இன்னும் வகுக்கப்படவில்லை. அப்படி வகுக்கப்படாத நிலையில் அவமதிப்பு வழக்குகளை உயர் நீதிமன்றமோ, மேன்முறையீட்டு நீதிமன்றமோ கையாள முடியாது என்ற அடிப்படையில் தமது வாதத்தை ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன் நேற்றுக் பகல் முழுவதும் முன்வைத்தார்.

"அப்படியானால் இலங்கை உயர்நீதிமன்றமும், மேன்முறையீட்டு நீதிமன்றமும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை விசாரணை செய்யவே முடியாதா? இதுவரை காலமும் அத்தகைய வழக்குகள் இந்த நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டு காலத்துக்கு காலம் தீர்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளனவே!" – என்று நீதியரசர்கள் சுட்டிக் காட்டினார்.

அது தவறு என்று பதிலளித்த ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன், நீதிமன்ற நடைமுறைக்கான சட்டக் கோவையோ, சட்டங்களோ இல்லாமல் இத்தகைய வழக்குகளை விசாரிக்க முடியாது என்பதை முன்னைய வழக்குகளில் சம்பந்தப்பட்டோர் கவனியாமல் விட்டிருக்கலாம். ஆனால் நான் இதனை இப்போது நீதிமன்றத்தில் எமது வாதமாக முன்வைக்கிறேன். – என்றார் அவர்.

அவரது வாதத்தை செவிமடுத்த நீதியரசர்கள் வழக்கை ஒக்ரோபர் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

அன்றைய தினம் இந்தப் பூர்வாங்க ஆட்சேபனை மீது மற்றைய இரு எதிர்மனுதாரர்களான அனந்தி சசிதரன், சிவநேசன் ஆகியோரின் சட்டத்தரணிகளும் மற்றொரு எதிர்மனுதாரரான டாக்டர் சத்தியலிங்கத்தின் தரப்பு சட்டத்தரணியான எம்.ஏ.சுமந்திரனும் வாதம் செய்வர்.

அதன் பின்னர் இந்தப் பூர்வாங்க ஆட்சேபனை தொடர்பில் நீதிமன்றத்தின் முடிவின் அடிப்படையில் வழக்கு விசாரணை தொடரும் எனத் தெரிய வருகின்றது.

நேற்று வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனும் ஏனைய இரு மாகாண அமைச்சர்களான அனந்தி சசிதரன், சிவநேசன் ஆகியோரும் மனுதாரரான டெனிஸ்வரனும் மன்றில் முன்னிலை ஆனார்கள். (உ)

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேசமயம், அரசுத் தரப்பின் இந்த நிலைப்பாட்டை ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும், அமைச்சருமான சம்பிக்க ரணவக்க நேற்று பகிரங்கமாகப் பிரதிபலித்தார்.

"நாட்டுக்கு எதிராக ஆயுதம் தாங்கிப் போராடிய பன்னீராயிரம் விடுதலைப் புலிகள், யுத்தம் முடிந்த கையோடு பொது மன்னிப்பு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். அப்படியிருக்க, சட்டத்தை மீறினர் என்று பாதுகாப்புப் படைகளுக்கு எதிராக மட்டும் விசாரணைகள் பாய்கின்றமையையும், சட்டம் பிரயோகிக்கப்படுகின்றமையையும் தவறானது என மக்கள் கருதுகின்றார்கள். மக்கள் மத்தியில் இது தொடர்பில் கடும் விசனம் எழுந்துள்ளது. புலிகளைப் போல, படையினரையும் அவர்களுடன் சேர்ந்து செயற்பட்ட தமிழ்க் குழுவினரையும் பொது மன்னிப்பு அளித்து விடுவிக்க வேண்டும்.

"அதேசமயம், யுத்த காலத்தில் தனிப்பட்ட நோக்கங்களுக்காக யுத்த சூழலைப் பயன்படுத்தி யுத்தக் குற்றங்கள், அராஜகங்கள் புரிந்தோரைக் கண்டு பிடிக்க விசேட குழுக்கள் மூலம் ஆய்ந்தறிந்து நடவடிக்கை எடுக்கலாம்." – என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இவ்வாறு இரு தரப்பினருக்கும் ஒட்டுமொத்தமாக பொது மன்னிப்பும் விடுதலையும் அளித்து பிரகடனம் ஒன்றை வெளியிடுவதன் மூலம், யுத்த காலக் குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற வலியுறுத்தல்களுக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்கலாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருதுகின்றார் எனக் கூறப்படுகின்றது.

எதிர்வரும் 25 ஆம் திகதி ஐ.நா.பொதுச்சபையில் உரையாற்றும்போது இந்த யோசனைத் திட்டத்தையே அவர் முன்வைத்து, தமது அந்த உத்தேசத் திட்டத்துக்கு முழு உலகமும் ஆதரவு தரவேண்டும் என அவர் கோருவார் எனக் கூறப்படுகின்றது.

அப்படி எல்லாத் தரப்புக்களையும் மன்னித்து, விடுவித்து விட்டால் அந்தத் தரப்புகளுக்கு எதிராக யுத்தக் குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் வலுவிழந்து விடும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்பார்க்கின்றார் என்றும் கூறப்பட்டது.

அவரது அந்த யோசனைத் திட்டத்துக்கு உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் பிரதிபலிப்பு எவ்வாறாக அமையும் என்பது இனி இனித்தான் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## யாழ். நூலகத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புத்தகங்களைக் கையளிக்கும் நிகழ்வு, யாழ். நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுச் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

தமிழகத்தின் கல்வி, பள்ளித் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையனின் பங்குபற்றுதலுடன், கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணனின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, தமிழ் நாட்டு அரசால் யாழ். பொது நூலகத்துக்கு வழங்கப்பட்ட 50ஆயிரம் புத்தகங்களை தமிழகக் கல்வி அமைச்சர் செங்கோட்டையன் யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னோல்டிடம் கையளித்தார்.

தொடர்ந்து, வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மற்றும் வாசிகசாலைகளுக்குப் புத்தகங்களை பெற்றுக் கொள்வதற்காக கல்வியமைச்சினால் நிதி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.சரவணபவன் உட்பட இலங்கை மற்றும் இந்திய பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-7)

## வல்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு யாழ். மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துக் கட்டளை வழங்கியுள்ளது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா உட்படக் கட்சியின் செயலாளர், பொருளாருக்கு எதிராக இந்த இடைக்காலத் தடைக் கட்டளையை வழங்கிய யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி வி.இராமகமலன், எதிர்வரும் 2ஆம் திகதி பிரதிவாதிகளை மன்றில் முன்னிலையாகுமாறு அழைப்புக் கட்டளை வழங்கினார்.

தமிழீழ விடுதலைக் கழகம் (ரெலோ) கட்சியைச் சார்ந்த கந்தசாமி சதீஸ், கரந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

ரெலோவின் பரிந்துரையின் பேரில் கட்சியின் கட்டுப்பாடுகளிலிருந்து விலகிச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் க.சதீஸை தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து அந்தக் கட்சி நீக்கியது.

இந்த நடவடிக்கையின் ஊடாக அவரை நகர சபை உறுப்புரிமையிலிருந்து நீக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கும் தமிழரசுக் கட்சி சார்பில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் கட்சியின் தலைமை எடுத்துள்ள தீர்மானத்துக்கு ஆட்சேபனை தெரிவித்தும் அதனை வெற்றும் வறிதானதுமாக்கும் கட்டளையை வழங்கக் கோரியும் கந்தசாமி சதீஸ் சார்பில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனால், யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் நீதிப் பேராணை மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

மனுவின் பிரதிவாதிகளாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, செயலாளர் கி.துரைராசசிங்கம் மற்றும் பொருளாளர் பொ.கனகசபாபதி ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அந்த மனு நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்ப மாவட்ட நீதிபதி வி.இராமகமலன் கட்டளை வழங்கினார்.

மனுதாரரின் இடைக்கால நிவாரணமான, தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கும் பிரதிவாதிகளின் அறிவித்தலுக்கு இடைக்காலத் தடை வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை ஏற்ற மாவட்ட நீதிமன்றம், எதிர்வரும் 14 நாள்களுக்கு இடைக்காலத் தடை உத்தரவை வழங்கியது.

வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அன்றைய தினம் பிரதிவாதிகள் மன்றில் முன்னிலையாகித் தமது பதிலைச் சமர்ப்பிக்க மன்று அழைப்புக் கட்டளை வழங்கியது.

இதேவேளை, தமிழரசுக் கட்சியின் வலிகாமம் தெற்கு பிரதேச சபை உறுப்பினர் ஜி.பிரகாஷை, கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கும் தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைக்கு எதிர்வரும் 25ஆம் திகதிவரை யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. அந்த மனுவையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணனே முன்வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

## உண்மைகளைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இழைத்தார்கள் என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும். அதன் பின்னரே பொதுமன்னிப்பு பற்றி ஆராயவோ, பரிசீலிக்கவோ முடியும்.

முகம் தெரியாத குற்றவாளிகளுக்கு பொது மன்னிப்பு அளிப்பதாகப் பிரகடனப்படுத்துவதன் மூலம் யுத்தக் குற்றங்களை மூடி மறைத்து, நீதியான விசாரணைகளைப் புறந்தள்ளும் செயற்பாட்டுக்கு நாம் இணங்கவே மாட்டோம். அந்த முயற்சியை வன்மையாக எதிர்ப்போம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை நேற்று வெளிப்படுத்தினார் அதன் பேச்சாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் யுத்தத்தின் பின்னர் நல்லிணக்கத்தை ஏற்படும் நடவடிக்கையாக பொது மன்னிப்பு அளிக்கப்பட்டது உண்மையே. ஆனால் அங்கு உண்மைகள் முழுமையாகக் கண்டறியப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட்டு, குற்றமிழைத்தோர் அடையாளப்படுத்தப்பட்ட பின்னரே அந்தப் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது.

இங்கும் புலிகள் தரப்பில் அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடினார்கள் என்று குற்றம் சுமத்தப்பட்ட போராளிகள் உட்பட அனைவரும் அதற்காகக் கைது செய்யப்பட்டனர். விசாரிக்கப்பட்டனர். உண்மைகள் கண்டறியப்பட்டன. அதன் பின்னரே சுமார் பன்னீராயிரம் போராளிகள் மன்னிப்பு அளித்து விடுவிக்கப்பட்டார்கள். புனர்வாழ்வு என்ற வகையில் கூட அவர்கள் தடுப்பை எதிர்கொண்ட பின்னரே விடுவிக்கப்பட்டனர்.

பெரிய குற்றங்களை இழைத்தோர் அதற்காக விசாரிக்கப்பட்டார்கள். தண்டிக்கப்பட்டனர். சிறை வைக்கப்பட்டனர். இன்னும் சிறையில் இருக்கின்றனர். தடுப்புக் காவலில் வாடுகின்றனர்.

அப்படி எல்லாம் இருக்கையில் ஒட்டு மொத்தமாகப் படையினருக்கும் பொதுமன்னிப்பு என்ற துளாவல் அறிவிப்பு மூலம் அவர்கள் இழைத்த குற்றங்களையும், குற்றவாளிகளையும் மூடி மறைக்கும் எத்தனத்துக்கு நாம் இடமளிக்க மாட்டோம்.

இலங்கை அரசு தரப்பின் அத்தகைய மூடி மறைப்பு ஏற்பாட்டுக்கு சர்வதேச சமூகம் ஒரு போதும் உடன்படவே படாது என்று நம்புகின்றோம். – என்றார் சுமந்திரன் எம்.பி.

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது.

தங்களை விடுவிக்குமாறு அல்லது புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறு கோரி கடந்த 14ஆம் திகதி 8 தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளில் ஒருவர் சுகயீனம் காரணமாகச் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபடுபவர்களை பல அரசியல் தலைவர்களும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் சென்று சந்தித்து வருகின்றனர். (ஐ)

## அனந்திக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும் ஆங்கில மொழியில் உள்ளன. எனது கட்சிக் காரரான திருமதி அனந்தி சசிதரனுக்கு ஆங்கிலமொழி தெரியாது. ஆகவே இந்தக் குற்றப் பத்திரத்தில் உள்ள விடயத்தை புரிந்து கொண்டு குற்றவாளியா, சுத்தவாளியா என்று பதிலளிக்க முடியாத நிலையில் அவர் உள்ளார்." – என அனந்தி சசிதரனின் தரப்பில் பிரசன்னமான சட்டத்தரணி கணேசராஜா தெரிவித்தார்.

அச்சமயம் குறுக்கிட்ட நீதியரசர்கள் இந்த வழக்கில் தம் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகளை நியமித்து நீதிமன்றுக்கு எதிர்மனுதாரர் அனந்தி சசிதரன் சமர்ப்பித்த 'புரொக்ஸி' பத்திரத்தை பரிசீலனைக்கு எடுக்க உத்தரவிட்டனர்.

அதில் தமது சட்டத்தரணியாக இன்னார் நியமிக்கப்படுகின்றார் என்ற ஆவணத்தை அனந்தி சசிதரன் ஆங்கில மொழியில் நிரப்பியிருந்தமையை நீதிமன்று சுட்டிக்காட்டியது.

தனது சட்டத்தரணியைத் தாம் நியமிப்பது பற்றிய ஆவணத்தை ஆங்கிலத்தில் சமர்ப்பிக்கும் எதிர்மனுதாரர், தமக்கு ஆங்கில மொழி தெரியாதமையால் குற்றவாளியா, சுத்தவாளியா என்றுரைக்க முடியாமல் உள்ளது என்று கூறும் ஆட்சேபனையை ஏற்க முடியாது என நீதியரசர்கள் கட்டளை பிறப்பித்தனர்.

அச்சமயம் குறுக்கிட்ட மனுதாரர் டெனிஸ்வரனின் சட்டத்தரணி சுரேன் பெர்னான்டோ, இவ்வாறு தமக்கு ஆங்கிலம் தெரியாது என தமது சட்டத்தரணி மூலம் அனந்தி சசிதரன் முன்வைத்த சமர்ப்பணத்தை அப்படியே நீதிமன்ற பதிவேட்டில் பதிய வேண்டும் என்று கோரினார்.

"அனந்தி சசிதரன் ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் ஆங்கிலத்தில் உரையாற்றியிருக்கின்றார். அதற்கான வீடியோ ஆதாரங்கள் எங்களிடம் உண்டு. அவற்றை எல்லாம் நீதிமன்றில் சமர்ப்பித்து, ஆங்கிலம் தெரிந்திருந்தும், தமக்கு ஆங்கிலம் தெரியவில்லை என்று கூறியதன் மூலம் இந்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தை அவர் அவமதித்துள்ளார் எனப் பிறிதொரு நீதிமன்ற அவமதிப்பு வழக்கை நாம் தொடுக்க எண்ணியுள்ளோம். அதற்காக இந்த விடயத்தை நீதிமன்றப் பதிவுகளில் சேர்த்துக் கொள்ளும்படி வேண்டுகிறோம்." – என்றும் அவர் வேண்டினார்.

அவரது கோரிக்கையை ஏற்ற நீதியரசர்கள் அந்த விடயங்களை நீதிமன்றப் பதிவுகளில் தவறாது சேர்த்துக் கொள்ள உத்தரவிட்டனர். (உ)

# 11 இளைஞர் கடத்தல் விவகாரம்: தூதரகங்களுக்கு மனு கையளிப்பு

கொழும்பு, செப். 19

இலங்கை இராணுவத்தினரால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 11 இளைஞர்களின் குடும்ப ஒன்றியத்தினர் நேற்று வெளிநாட்டுத் தூதரகங்களுக்குத் தங்கள் கோரிக்கை மனுக்களைக் கையளித்துள்ளனர்.

கனேடியத் தூதரகம், அமெரிக்கத் தூதரகம், ஐக்கிய நாடுகள் சபை அலுவலகம், பிரித்தானியத் தூதரகம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியக் காரியாலயம் ஆகிய இடங்களுக்குச் சென்று அங்கு சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளிடம் தங்களது மனுக்களைக் கையளித்துள்ளனர்.




கடந்த ஆட்சிக் காலத்தில் அரங்கேறியிருந்த இந்தக் கடத்தல் சம்பவத்தைக் கண்டித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் இல்லத்தின் முன்பாகக் கவனவீர்ப்புப்போராட்டமொன்றையும் அவர்கள்முன்னெடுத்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து சுவிஸ் தூதரகத்துக்குச் சென்ற குடும்ப ஒன்றியத்தினர் அங்கு, தூதுவரின் பிரிதிநிதியான டெமியானோவிடம் மனுவொன்றைக் கையளித்தனர்.

அங்கு அவர்களுக்கு சுவிஸ் தூதரகத்தின் ஏற்பாட்டில் தேநீர் விருந்துபசாரமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தேநீர் விருந்துபசாரத்தைத் தொடர்ந்து அவர்களின் பிரச்சினைகளை சுவிஸ் அதிகாரிகள் கேட்டறிந்தனர்.

கடந்த 2008ஆம் ஆண்டு, கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்டனர்.

கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில், தற்போதைய அரசில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் உள்ளிட்ட அறுவர் கடந்த ஆண்டு ஜூலை மாதம் 12ஆம் திகதி குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு, சுமார் 6 மாதகாலக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் விசாரணையைத் தொடர்ந்து பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சரணடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுவதை முற்றாக நிராகரிக்கின்றேன் எனத் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இராணுவத்திடம் சரணடைந்த விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர் கேணல் ரமேஸ் உள்ளிட்ட சிலரை இராணுவத்தினர் கொலை செய்திருக்கலாம் என அண்மையில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் -

யுத்தம் ஒன்று இடம்பெறும் போது இரண்டு தரப்பிலும் மரணித்திருப்பார்கள். அது சாதாரண விடயம். அதற்காக சரணடைந்தவர்களைக் கொலை செய்யுமளவுக்கு இராணுவம் செயற்படவில்லை என்பதை நாங்கள் பகிரங்கமாக தெரிவிக்கின்றோம்.

சரணடைந்த விடுதலைப் புலிகள் மற்றும் பொதுமக்களை இராணுவத்தினர் கொலை செய்தனர் என இப்போது தெரிவிக்கின்றவர்கள். அந்தக் காலத்தில் ஏன் இதனைத் தெரிவிக்காமல் மறைத்தனர் என்று கேட்கின்றேன்.

இந்தப் பிரசாரமானது மிகவும் பயங்கமானதாகும். அதனால் இது தொடர்பில் எதிர்காலத்தில் அவரிடம் வாக்குமூலம் எடுக்கலாம். - என்றார். (ஐ)

# எம்.பிக்களுக்கு நேற்று சபாநாயகர் எச்சரிக்கை

கொழும்பு, செப். 19

கூட்ட நடப்பெண் (கோரம்) இன்மையால் நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கும் நிலைமை இனியும் ஏற்படக்கூடாது. இது விடயத்தில் ஆளும், எதிரணி உறுப்பினர்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும் என்று சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் ஒரு மணிக்குக் கூடியபோது, சபாநாயகர் அறிவிப்புவேளையிலேயே இந்த அறிவிப்பு சபாநாயகரால் விடுக்கப்பட்டது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

கூட்ட நடப்பெண் இல்லாததால் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட சம்பவங்கள் கடந்த சபை அமர்வின்போது நடந்துள்ளன. இது கவலைக்குரிய விடயமாகும்.

நாடாளுமன்றம் உயரிய சபையாகக் கருதப்படுவதுடன், நாட்டை நிர்வகிப்பதற்குரிய சட்டங்கள் இயற்றப்படும் சட்டவாக்கச் சபையாகவும் அது விளங்குகின்றது. சபை அமர்வுகள் நடைபெறும் நாள்களில் முக்கிய சில பணிகள் இடம்பெறுகின்றன.

அதுமட்டுமல்ல. சபை அமர்வுக்காக மக்களின் பணம் செலவிடப்படுகின்றது. அதை வீண் விரயமாக்கும் வகையில் எவரும் செயற்படக்கூடாது. கூட்டநடப்பெண் விடயத்தில் ஆளும், எதிரணி உறுப்பினர்கள் பொறுப்பாகச் செயற்படவேண்டும். இனியும் இப்படியான சம்பவம் நடக்க இடமளிக்ககூடாது. - என்றார். (ஐ)

## வடக்கு, கிழக்கு, மலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

50ஆயிரம் நூல்கள் கையளிக்கும் நிகழ்வு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலையே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையின் வடக்கு -கிழக்கில் உள்ள தமிழர்கள் இந்தியத் தமிழ் நாட்டின் மேல் வைத்துள்ள அன்புக்குநான்நன்றிகூறவேண்டும். ஒரு நாடு வளம்பெற வேண்டுமானால் கல்வியில் அந்த நாடு முதலில் வளம் பெறவேண்டும். கல்வியில் வளச்சி பெற்ற நாடு அனைத்து துறைகளிலும் பிரசித்தி பெற்றதாகத் திகழும்.

இந்தப் புத்தகங்களைக் கையளிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டபோது தமிழக முதலமைச்சரும், துணை முதலமைச்சரும் உறுதுணையாக இருந்தனர். அன்று ராமர் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வரும்போது அணில்கள் எவ்வாறு பாலம் அமைத்து உதவிபுரிந்தனவோ அதேபோன்று நானும் இன்று அணிலாக இருந்து வடக்கு மக்களுக்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்வேன்.

இன்று இலங்கையில் வாழும் மக்களுக்கு இந்திய அரசு பல உதவிகளைச் செய்து வருகின்றது. தமிழர்கள் எங்கு இருந்தாலும் தமிழக அரசு உதவிகளைச் செய்யும்.

புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்மொழியைக் கற்றுக்கொடுப்பதற்கான ஆசிரியர்களை அனுப்பிவைக்கும் நடவடிக்கையும் இந்திய அரசு மேற்கொள்ளவுள்ளது.

வடக்கில் உள்ளவர்களை முன்னேற்றவேண்டுமாக இருந்தால் அவர்களை ஊக்கப்படுத்தினால் மட்டும் போதும். அவர்களாகவே முன்னுக்கு வந்துவிடுவார்கள். அந்தளவுக்கு இங்கு உள்ளவர்கள் திறமையானவர்கள் என்பதை நான் அறிந்துகொண்டுள்ளேன்.

இலங்கையின் மத்திய அரசும், இந்தியாவின் நரேந்திர மோடியின் மத்திய அரசம் இணைந்து பல வேலைத்திட்டங்களைச் செய்ய உள்ளன. குறிப்பாக இலங்கையின் பிரதமரும், இந்தியாவின் பிரமதரும் இணைந்து பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க உள்ளார்கள். இவ்வுதவித்திட்டங்களுக்கு தமிழக அரசு உறுதுணையாக இருக்கும் - என்றார். (ஐ-7)

## டெனிஸ்வரனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை நேற்று நீடிக்கப்பட்டது.

இது தொடர்பான டெனிஸ்வரனின் மூல வழக்கு அடுத்த மாதம் எட்டாம் திகதி எடுக்கப்படுவதாக முன்னர் திகதியிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக அந்த இடைக்கால உத்தரவும் அடுத்த மாதம் 9 ஆம் திகதி வரை வழங்கப்பட்டிருந்தது.

ஆனால், இவ்விடயத்தை ஒட்டிய நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நேற்று நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டு பூர்வாங்கப் பரிசீலனையின் பின்னர் ஒக்ரோபர் 16 ஆம் திகதிக்குத் தள்ளி வைக்கப்பட்டது.

இந்தப் பின்புலத்தில் மூல வழக்கு எதிர்வரும் 16 ஆம் வரை மீள நீதிமன்றத்தில் எடுக்கப்பட மாட்டாது என்ற நிலையில், மேற்படி இடைக்கால உத்தரவை அடுத்த மாதம் 17 ஆம் திகதி வரை நீடித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவு வழங்கியது.

## மைத்திரிபால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுயாதீன விசாரணை இடம்பெற்று வருகிறது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் சபைக்குத் தெரியப்படுத்தினர்.

நாடாளுமன்றம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது.

சபாநாயகர் அறிவிப்பு, பொது மனுத்தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆகியன முடிவடைந்த பின்னர் நிலையியல் கட்டளையின் 27/2இன் கீழ்கூட்டுஎதிரணியின் எம்.பியான தினேஷ் குணவர் தன கேள்வி எழுப்பினார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொலை செய்வதற்குச்சூழ்ச்சிவகுக்கப்பட்டது எனப்பிரதிப் பொலிஸ்மா நாலக்கடி சில்வாவினால் தகவல் வெளியிடப்பட்டுள்ளது, இது தொடர்பான குரல் பதிவை நாமல் குமாரகே என்பவர் அம்பலப்படுத்தியுள்ளார், நாட்டிலுள்ள ஊடகங்களில் அது பிரதான செய்தியாகவெளிவந்தது, எனவே, இது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளதா? என்று அவர் கேட்டார்.

இதற்குப் பதிலளித்த சட்டம், ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார -

குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் இடம் மாற்றப்பட்டுள்ளார். இது தொடர்பில் சுயாதீன விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. விசாரணைகள் முடிவடைந்த பின்னரே முடிவொன்றுக்கு வரமுடியும்.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரைப் பாதுகாக்கவேண்டியது எமது பொறுப்பாகும். இந்த விடயத்தில் அரசு உறுதியாக இருக்கின்றது. எமது நாட்டுப் பிரஜை அல்லாதவர்களுக்கும் நாம் பாதுகாப்பளிப்போம். - என்று குறிப்பிட்டார்.

அதன் பின்னர் கருத்து வெளியிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க -

விசாரணை இடம்பெற்று வரும்வேளை அனைத்து விடயங்களையும்வெளியிடமுடியாது. ஜனாதிபதி மீது எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இருக்கும் அக்கறைக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தற்போதைய ஜனாதிபதி அன்று பொது வேட்பாளராகக் களம் இறங்கியவேளை, அவருக்கானப் பாதுகாப்பை நீக்கியவர்கள்தான் இன்று அவர் தொடர்பில் பேசுகின்றனர் - என்றார். (ஐ)

## வடக்கு - கிழக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். விவசாய ஆராய்ச்சி மையங்கள் வேண்டும். இங்குள்ள பல்கலைக்கழகங்களைச் சர்வதேசப் பல்கலைக் கழகங்களுடன் இணைக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ் மக்களின் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர் மாவைசேனாதிராசா, மாகாணக் கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன், விவசாயப் பிரதிஅமைச்சர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் யாழ். வந்த தமிழகக் கல்வி அமைச்சர் செங்கோட்டையனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட தமிழகக் கல்வி அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தமிழக அரசினால் வழங்கப்பட்ட 50ஆயிரம் புத்தகங்களை யாழ். பொது நூலகத்துக்கு வழங்கினார்.

இந்த நிகழ்வு யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற போதே தமிழ் மக்கள் சார்பாக மக்களின் பிரதிநிதிகள் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களும் இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்கள் போன்று வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் நேரடித் தொடர்புகளைக் கொண்டு மாணவர்களுக்கானபுலமைகளைஉயர்த்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

அங்கு உரையாற்றிய விவசாயப் பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன், வடக்குக்கு விவசாய ஆராய்ச்சி மையங்கள் தேவை. இங்குள்ள விவசாயிகளுக்குப் புதிய தொழில் நுட்பமுறைகள் அறிமுகப்படுத்தப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இங்குள்ள பல்கலைக்கழகங்கள் சர்வதேசப் பல்கலைக் கழகங்களுடன் இணைக்கப்பட வேண்டும் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரனும் கோரினார்.

இவற்றுக்குப் பதிலளித்த தமிழகக் கல்வி அமைச்சர் செங்கோட்டையன் -

விவசாய ஆராய்ச்சி மையம் வடக்குக்குத் தேவை என்று இலங்கையின் விவசாயப் பிரதிஅமைச்சர் கோரிக்கை விடுத்திருந்தார். தமிழ்நாடு, கோவையில் உள்ள வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மட்டும் 1642 வோளாண்மைப்பேராசிரியர்கள்உள்ளார்கள்.

இதனால் பல வேளாண்மை ஆராய்வுகளை மேற்கொள்கின்றேம். இவ்வாறான ஓர் ஆராய்ச்சி மையத்தையே பிரதி அமைச்சர் என்னிடம் கோரியிருக்கிறார். அது தொடர்பான கோரிக்கைக் கடிதம் ஒன்றையும் எனக்குச் சமர்ப்பித்துள்ளார். இது தொடர்பில் தமிழக முதலமைச்சருடனும், வோளாண்மைத்துறை அமைச்சருடனும் பேசி நல்ல முடிவைத் தருவேன்.

இதேபோன்று பல்கலைக் கழகங்களை இணைத்துக்கொள்வது தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினரும் மாகாணக் கல்வி அமைச்சரும் கேட்டிருக்கின்றனர். இந்தவிடயங்கள் தொடர்பிலும் வடக்கு மக்களின் தேவைகள் தொடர்பிலும் தமிழக முதலமைச்சருக்குத் தெரியப்படுத்தி, அவர் ஊடாகத் தேவைகளைப் பூர்த்தி செய்வேன். - என்றார். (ஐ-7)

# படுதோல்வியுடன் பரிதாபமாக வெளியேறியது இலங்கை அணி





ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர்களில் 5 தடவைகள் சாம்பியன் பட்டம் வென்ற இலங்கை அணி, இம்முறை முதல் சுற்றிலேயே பரிதாபமாக வெளியேறியது. அபாரமாக ஆடிய ஆப்கானிஸ்தான் அணி 91 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அதிர்ச்சி தந்தது.

ஐக்கிய அரபு எமிரேட்சில் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடக்கிறது. அபுதாபியில் நடந்த 'பி' பிரிவு லீக் போட்டியில் இலங்கை, ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் அணித் தலைவர் அஸ்கர், முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

ஆப்கானிஸ்தான் அணிக்கு முகமது ஷாஜத், இானுல்லா ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.

மலிங்க, துஷ்மந்த சமீர, திசார பெரோ ஆகியோரின் பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய ஷாஜத், அகில தனஞ்சஜவின் பந்தில் ஒரு சிக்சர் விளா சினார். முதல் விக்கெட்டுக்கு 57 ஓட்டங்களைச் சேர்த்தபோது தனஞ்சயின் 'சுழலில்' ராஜத் (33) ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் ஒத்துழைப்பு தந்த இானுல்லா, திசார பெரேர வீசிய 19ஆவது ஓவரில் 2 பவுண்டரிகள் அடித்தார். இவர், 45 ஓட்டங்கள் எடுத்திருந்த போது தனஞ்சஜவின் பந்தில் வெளியேறினார். பொறுப்பாக ஆடிய ரஹ்மத் ஷா அரைச் சதம் அடித்தார்.

ஆப்கானிஸ்தான் அணி 50 ஓவரில் 249 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

அவுட்டாகாமல் இருந்தார். இலங்கை அணி சார்பில் திசார பெரேரா 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய இலங்கை அணிக்கு தொடக்கத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

முஜீப் ரஹ்மான் வீசிய முதல் ஓவரில் குசல் மெண்டிஸ் ஆட்டமிழந்தார்.

குல்பதின் பந்தை சிக்சருக்கு அனுப்பிய தனஞ்சய டி சில்வா (23) 'ரன் – அவுட்' ஆனார். ரஷித் கான் 'சுழலில்' குசால் பெரேரா (17) போல்டானார்.

பொறுப்பாக ஆடிய உபுல் தரங்க (36) ஓரளவு கைகொடுத்தார். ஷேன் ஜெயசூர்ய (14) 'ரன் – அவுட்' ஆனார். முகமது நபி 'சுழலில்' சிக்கிய அணித்தலைவர் மத்தியூஸ் (22) நிலைக்கவில்லை.

இலங்கை அணி 41.2 ஓவரில் 158 ஓட்டங்களுக்கு சுருண்டு தோல்வியடைந்தது. ஏற்கனவே பங்களாதேஷிடம் வீழ்ந்த இலங்கை அணி, தொடர்ந்து 2ஆவது தோல்வியை பதிவு செய்து அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை இழந்தது. இதனையடுத்து 'பி' பிரிவில் இருந்து வங்கதேசம், ஆப்கானிஸ்தான் அணிகள் 'சூப்பர் – 4' சுற்றுக்குள் நுழைந்தன.

அபாரமாக ஆடிய ஆப்கானிஸ்தான் அணி, சர்வதேச ஒருநாள் போட்டி அரங்கில் இலங்கைக்கு எதிராக முதல் வெற்றியை பதிவு செய்தது. இதுவரை இவ்விரு அணிகள் 3 முறை மோதின. இதில் இலங்கை 2 (2014, 2015), ஆப்கானிஸ்தான் ஒருமுறை (2018) வெற்றி பெற்றன.

## றொனால்டோவின் கோலை கொண்டாடும் இரசிகர்கள்




இத்தாலியில் நடைபெறும் மிக பழமையானதும், பிரபலமானதுமான உதைபந்து தொடரான சீரி 'ஏ' லீக் தொடர், தற்போது விறுவிறுப்புக்குப் பஞ்சமில்லாமல் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில், இத்தொடரில் முதல் முறையாக விளையாடிவரும் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ றொனால்டோ, தனது முதல் கோலை அடித்துள்ளார்.

இதனைத் தற்போது கிறிஸ்டியானோ றொனால்டோவின் இரசிகர்கள், உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர்.

நடப்பு தொடரில், முதல் மூன்று போட்டிகளிலும் பங்கேற்ற கிறிஸ்டியானோ றொனால்டோவினால், கோல் அடிக்க முடியவில்லை. இதனால் இரசிகர்கள் பெரும் ஏமாற்றத்திற்குள்ளாகினர்.

இந்நிலையில், இத்தொடரின் சஸ்சுவோலா அணிக்கெதிராக தனது நான்காவது போட்டியில் களமிறங்கிய றொனால்டோ, 50ஆவது நிமிடத்தில் தனது முதல் கோலைப் போட்டு இரசிகர்களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தினார்.

அத்தோடு, 65ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோலைப் பதிவு செய்து அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இந்த வெற்றியின் மூலம் ஜுவான்டஸ் அணி, நான்கு போட்டிகளிலும் வெற்றி பெற்று 12 புள்ளிளுடன் முதல் இடத்தில் உள்ளது. நபோலி 9 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

உலகின் தலைசிறந்த கால்பந்து வீரராக திகழும், போர்த்துக்கல் உதைபந்து அணியின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ றொனால்டோ, இதற்கு முன்னதாக ரியல் மெட்ரிட் அணிக்காக விளையாடி வந்தார்.

ரஷ்யாவில் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ண உதைபந்து தொடருக்கு பின்னர், சீரி 'ஏ' லீக் தொடரில் 34 முறை சம்பியன் பட்டம் வென்ற அணியான ஜுவான்டஸ் அணிக்கு மாறினார்.

## பாபர் அசாமின் அசத்தல் சாதனை



பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்ட வீரர் பாபர் அசாம் குறைந்த இன்னிங்சில் 2000 ஓட்டங்களைக் கடந்த 2 ஆவது வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

14 ஆவது ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பாகிஸ்தான் – ஹொங் கொங் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹொங் கொங் 116 ஓட்டங்களுக்குள் சுருண்டது. பின்னர் 117 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் பாகிஸ்தான் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் பாபர் அசஷாம் 33 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். அவர் 27 ஓட்டங்களைப் பெறும் போது ஒருநாள் போட்டியில் 2000 ஓட்டங்களை தொட்டார். இந்த ஓட்டங்களை எடுக்க 47 ஒருநாள் போட்டியில் 45 இன்னிங்ஸ் மட்டுமே தேவைப்பட்டது அவருக்கு.

இதன்மூலம் விரைவாக இரண்டாயிரம் ஓட்டங்களைப்பெற்ற 2 ஆவது வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். தென்னாபிரிக்காவின் ஹசிம் அம்லா 40 இன்னிங்சில் இரண்டாயிரம் ஓட்டங்களை கடந்து முதல் இடத்தில் உள்ளார்.

23 வயதாகும் பாபர் அசாம் 47 ஒருநாள் போட்டியில் 45 இன்னிங்சில் களம் இறங்கி 8 சதம், 7 அரைசதங்களுடன் 2006 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார். இவரது சராசரி 54.21 என்பது குறிப்பிடத்தக்கது.

## பார்சிலோனா - ஜேர்மைன் அணிகள் தீவிர பயிற்சியில்

ஐரோப்பாவிலிருக்கும் உயர்தர உதைபந்து கழகங்களுக்காக நடத்தப்படும் சம்பியன்ஸ் லீக் தொடர், தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் 11 முறை சம்பியன் அணியான ரியல் மட்ரிட் அணி, ஐந்து முறை சம்பியனான பார்சிலோனா அணி, அட்லட்டிக்கோ மட்ரிட் அணி என 32 முன்னணி அணிகள் இத் தொடரில் பங்கேற்று விளையாடி வருகின்றன.

இதில் எட்டு குழுக்கள் பிரிக்கப்பட்டு அதில் நான்கு அணிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கமைய போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில், எதிர்வரும் போட்டிகளில் முன்னணி அணிகள் மோதவுள்ளதால், இப்போட்டிகள் இரசிகர்களின் எதிர்பார்ப்புக்களை அதிகரித்துள்ளது

இதேவேளை, இப்போட்டிகளில் சிறந்த திறமையை வெளிப்படுத்தி, வெற்றி பெற வேண்டும் என்பதோடு, இரசிகர்களையும், குதுகலப்படுத்தவேண்டும் என்பதற்காக முன்னணி அணிகளான பார்சிலோனா மற்றும் பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணிகள் தீவிர பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.

குழு 'பி' பிரிவில் இடம்பெற்றுள்ள பார்சிலோனா அணி, பி.எஸ்.வி. ஐந்தோவன் அணியை எதிர்கொள்ள




வுள்ளது. இதற்காக பார்சிலோனா அணி, பயிற்சிகளில் ஈடுபடுகின்து.

இதேபோல குழு 'சி' பிரிவில், லிவர்பூல் மற்றும் பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணிகள் மோதும் போட்டி; இரசிகர்கள் பலரினதும் எதிர்பார்ப்புக்களை அதிகரித்துள்ளது.

இதேவேளை, இதற்காக தற்போது பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணியும் தீவிர பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது.

இரு அணிகளிலுமே பலம் வாய்ந்த வீரர்கள் இருப்பதால், இப்போட்டியின் விறுவிறுப்புக்கு பஞ்சமிருக்காது என எதிர்பார்க்கப்படுகின்றது.

# சட்டவிரோதமாக மீன்பிடித்த எட்டு பேர் மடக்கிப் பிடிக்கப்பட்டுத் தடுத்துவைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செப். 19

பருத்தித்துறைக் கடற்பரப்பில் அத்துமீறிச் சட்டவிரோதத் தொழிலில் ஈடுபட்டிருந்த எட்டு மீனவர்களை அப்பகுதி மீனவர்கள் மடக்கிப் பிடித்துத் தடுத்து வைத்திருந்தமையால் அந்தப் பகுதியில் நேற்றுப் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தடுத்து வைக்கப்பட்ட மீனவர்களை விடுவிப்பதற்குச் சில கோரிக்கைகளை மீனவர்கள் முன்வைத்தனர். இது தொடர்பில் நடைபெற்ற பேச்சுக்களும் தோல்வியடைந்த நிலையில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுச் சில மணிநேரம் அந்தப் பகுதியில் பதற்றமான சூழல் நிலவியது.

வடமராட்சி கிழக்கில் அத்துமீறிச் சட்டவிரோதத் தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் நேற்று முன்தினம் பருத்தித்துறை கடற்பரப்பில் தங்கள் கைவரிசையைக் காட்டினர் எனக் கூறப்பட்டது. இதனை அவதானித்த பருத்தித்துறை மீனவர்கள் தமது கடற்பரப்புக்குள் அத்துமீறிய மீனவர்களை மடக்கிப் பிடித்துக் கரைக்குக் கொண்டு வந்து தமது பகுதியில் தடுத்து வைத்தனர்.

இதனால் நேற்றுக் காலை முதல் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அங்கு பெரும் எண்ணிக்கையான பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். இதனையடுத்து தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்குமாறு பிரதேச செயலர், பொலிஸார் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் அந்தப் பகுதி மீனவர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

ஆனாலும் தமது பகுதிகளில் இவ்வாறான தொழில் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதால் தாம் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர் எனச் சுட்டிக்காட்டிய அந்தப் பகுதி மீனவர்கள், தமக்கான தீர்வு இனிமேலாவது கிடைக்க வேண்டுமென்று வலியுறுத்தினர். இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கடற்றொழில், நீரியல் வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் வருகை தர வேண்டுமென்றும் கோரினர்.




இந்தக் கோரிக்கைகளுக்குச் சாதகமான பதில் கிடைக்காததால் மீனவர்களுடனான பேச்சு தோல்வியில் முடிவடைந்தது. இதனையடுத்து தமக்கான பதில் கிடைக்கும் வரை பிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்கப் போவதில்லை என்றும், அதுவரை தாம் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடாது கொட்டகைகளை அமைத்து தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபடப் போகிறார்கள் எனவும் வடமராட்சி மீனவர்கள் அறிவித்தனர்.

இதற்கமைய கொட்டகைகளை அமைத்துப் போராட்டம் நடத்துவதற்கு மீனவர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தபோது அவ்விடத்துக்கு வருகை தந்த காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலிஸார், பிடிக்கப்பட்ட மீனவர்களைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரினர்.

அதற்கு வடமராட்சி மீனவர்கள் மறுத்துவிட்டனர். "நீங்கள் எங்களிடம் அவர்களை ஒப்படைக்காவிட்டால் நாங்கள் இங்கிருந்து விலகிக் கொள்வதுடன் விசேட அதிரடிப்படையினரை இங்கு களமிறக்க நேரிடும்" என்று பொலிஸ் அத்தியட்சகர் எச்சரிக்கை விடுத்தார்.

இதனால் அங்கும் மேலும் பரபரப்பு ஏற்பட்டது. இந்நிலையில், அங்கு நின்றிருந்த பொலிஸார் திடீரென அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த மீனவர்களைப் பலவந்தமாக நுழைந்து மீட்டுச் சென்றனர். இதன்போது பொலிஸாருக்கும் அந்தப் பகுதி மீனவர்களுக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியது.

ஆனாலும் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த எட்டு மீனவர்களில் ஆறு பேரை மாத்திரமே பொலிஸார் மீட்டுச் சென்றனர். இதன் பின்னர் அருட்தந்தை ஒருவரின் தலையீட்டால் ஏனைய இரு மீனவர்களும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மீனவர்களை மீட்டுக் கொண்டு அவ்விடத்திலிருந்து பொலிஸார் அகன்றமையை அடுத்து அங்கு நிலவிய கொந்தளிப்பு நிலைமை சற்றுத் தணிந்தது.

ஆயினும், தமது கடல்வளத்தை அழிக்கும் அல்லது சூறையாடும் மீனவர்களுக்குப் பொலிஸார் ஆதரவை வழங்கி அவர்களைப் பாதுகாக்க முனைகின்றனர் என வடமராட்சி மீனவர்கள் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

தமது கோரிக்கைகளை ஏற்காது பொலிஸார் தம்மை அச்சுறுத்தினார்கள் எனவும், தம்மிடமிருந்து பலவந்தமாகவே மீனவர்களைப் பொலிஸார் மீட்டுச் சென்றனர் எனவும் கூறிய அப்பகுதி மீனவர்கள், தமது கோரிக்கைகளுக்குச் சாதகமான பதில் கிடைக்காவிட்டால் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளனர் எனவும் குறிப்பிட்டனர். (ஐ-7)

# தமிழர்களுக்கு இந்தியாவின் உதவிகள் தொடரவேண்டும்

## தமிழக அமைச்சரிடம் மாவை கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்களுக்கு இந்தியா செய்த, செய்து வருகின்ற உதவிகள் அளப்பரியவை. அதனை நாங்கள் மறக்கவில்லை. அதற்காக நன்றிகளையே கூறுகின்றோம். அத்துடன் தொடர்ந்தும் உதவிகளை இந்தியா வழங்கவேண்டுமென்று கேட்கின்றோம்.

- இவ்வாறு கோரிக்கை முன்வைத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

தமிழக அரசினால் யாழ். பொது நூலகத்துக்கு 50ஆயிரம் நூல்கள் கையளிக்கும் நிகழ்வு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலையே மாவை மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்– யாழ்ப்பாண நூலகம் ஆசியாவின் சொத்தாக இருந்தது. ஆனால் அது கடந்த 1981 ஆம் ஆண்டு எரிக்கப்பட்டது. தமிழர்களின் வரலாற்றில் கறைபடிந்த நாளாக அந்த நாள் மாறியது. அவ்வாறு நூலகம் எரிக்கப்பட்டதால் அங்கிருந்த நூல்கள் அனைத்தும் எரிந்தன. நூலகமும் கருகியது. ஆனால் அதற்குத் தற்போது வர்ணப் பூச்சு பூசப்பட்டுள்ளது. ஆனாலும் அதன் மூலம் வரலாற்றை மறைத்துவிட முடியாது.

தமிழ் மக்களின் கல்வி உச்ச நிலையில் இருந்தபோது அந்தக் கல்வியை அழித்துவிடுவதற்காக எடுக்கப்பட்ட முயற்சியே நூலகளிப்பு ஆகும். 90ஆயிரம் நூல்களைக் கொண்ட நூலகம் எரிக்கப்பட்டது. அது இலகுவாகக் கட்டியெழுப்பக்கூடியதல்ல. அதற்காகப் புத்தகங்களை வழங்கும் இந்தியாவின் இத்தகைய உதவிகள் மிகப் பெரியவை. இதனைக் கொண்டு வந்து கையளிக்கும் அமைச்சருக்கும் தமிழக அரசுக்கும் நன்றிகளை நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு இந்தியா எங்களுக்குப் பல உதவிகளை வழங்கியிருக்கின்றது. குறிப்பாக எம்.ஜி.ஆர் காலத்தில் இங்கிருந்து இடம்பெயர்ந்து தமிழகம் சென்றவர்களுக்குக் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கல்வி பயிலுவதற்குச் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. அவ்வாறு அனுமதிகள் வழங்கியதை நாங்கள் மறக்கவில்லை. அதற்கும் நாங்கள் நன்றிகளையே கூறுகின்றோம்.

அதேபோன்று எமது மாணவர்களுக்கு இங்குள்ள தூதரகம் ஊடாகப் புலமைப் பரிசில்களை இந்தியா வழங்கி வருகின்றது. அழிந்து போன தேசத்தில் கல்வியை உயர்த்துவதற்காக இந்தியா செய்கின்ற இத்தகைய உதவிகள் அளப்பரியவை - என்றார். (ஐ-7)

# விஜயகலா மீது வழக்கு

## சபையில் அறிவித்தார் சபாநாயகர்



கொழும்பு, செப். 19

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தொடர்பாக சட்டமா அதிபர் வழக்கு தொடர நடவடிக்கையெடுத்துள்ளார் என சபாநாயகர் கருஜயசூரிய சபைக்கு நேற்று அறிவித்தார்.

விஜயகலா மகேஸ்வரன் மீதான நடவடிக்கை தொடர்பாக நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே சபாநாயகர் இதனைத் தெரிவித்தார்.

விஜயகலா மகேஸ்வரன் வெளியிட்ட விடுதலைப் புலிகள் தொடர்பான கருத்து தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளதாகச் சபாநாயகரான நீங்கள் இந்தச் சபைக்கு அறிவித்திருந்தீர்கள்.

அதன்படி சட்டமா அதிபரினால் அது தொடர்பான ஆலோசனை வழங்கப்பட்டதா? அது வழங்கப்பட்டிருந்தால் அது என்ன? அவ்வாறு வழங்கப்படாவிட்டால் அதனை எப்போது பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றீர்கள்? - எனச் சபாநாயகரிடம் விமல் வீரவன்ஸ கேள்வியெழுப்பினார்.

இதன்போது பதிலளித்த சபாநாயகர், சட்டமா அதிபர் தேவையான நடவடிக்கையெடுப்பார் எனத் தெரிவித்துள் ளார். தற்போது வழக்கு தொடரவும் நடவடிக்கையெடுத்துள்ளார். - என்று தெரிவித்தார். (ஐ)

# பாரிய ஊழல், மோசடி குறித்து இதுவரை 1,599 முறைப்பாடுகள்

கொழும்பு, செப். 19

பாரிய ஊழல், மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆயிரத்து 599 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சரான ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்விச் சுற்றின்போது ஜே.வி.பியின் எம்.பியான பிமல் ரத்நாயக்கவால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

பாரிய மோசடி, ஊழல், அதிகார துஷ்பிரயோகம், அரச சொத்துகள் மற்றும் சிறப்புரிமைகளைத் துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு 2015 மார்ச் 3 ஆம் திகதி நிறுவப்பட்டது.

அன்றிலிருந்து 2017 செப்ரெம்பர் முதலாம் திகதிவரை 1, 599 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவ்வாறு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுள் 401 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.09.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.